திருவள்ளுவர் ஆண்டு 2040

# செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி : 52 பகுதி :9 | ஜூலை- 09 | விலை ரூ. 10/-



மதுரைத் தமிழ்ச்சங்கம் 14-09-1901 THE MADURAI TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு

# ஆசிரியர் வாழ்த்து

முனைவர். அரசக்கண்ணன்

சூரியச் சுடரே மாலையில் மறையும்
நிலவின் ஒளியோம காலையில் காலையும்
அறிவுப் பேரொளி அவ்விதம் அன்றே
ஆசிரியன் நீதான் முடிவில்லாப் பேரொளி

எல்லா வகைப்படும் ஒளியினும் மாந்தர்
அறியாமை அகற்றும் ஒளிதான் உயர்வாம்
கண்பெறும் ஒளியெனில் கல்வி யன்றோ?
கண்கண்ட கல்வியைத் தருவான் யாரோ?

வெளிச்சம் தரவே விளக்கு உண்டு
அறிவைத் தருபவன் ஆசிரியன் அன்றோ
அறிவொளி என்றும் வீழ்ந்ததில்லை
அறியாமை இருளோ வென்றதில்லை

வரலாறாய் வாழ்பவன் ஆசிரியன் என்றால்
வகுத்த நெறியில் வாழ்பவன் அவனே
உள்ளதைச் சொல்வான் நல்லதைச் சொல்வான்
உரிமைகள் சொல்வான் கடமைகள் சொல்வான்

மாறஉலகம் மாற்றம் சொல்வான்
மாறினும் தன்நிலைமாறா மாண்பினான்
குற்றங் குறைகள் நீங்கிய கொள்கையான்
குன்றா ஒளியாய் நின்றான் நினைந்திட

"நாட்டு வாழ்த்து, தாய்மொழி வாழ்த்து உண்டு
எனில் ஆசிரியர் வாழ்த்தும் அமையும்".

# செந்தமிழ்

(தோற்றம் 1902)

தொகுதி : 52
பகுதி : 9
ஜூலை 2009

திங்கள் இதழ்
திருவள்ளுவர் ஆண்டு 2040




வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867 - 02.12.1911

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 10 | |


முகவை மன்னர் **நா.குமரன் சேதுபதி**
தலைவர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்.

**ஆசிரியர்**
**இரா. அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை.

# பொருளடக்கம்

இதழ்மணம் 3

தமிழ் வளர்த்த தந்தையும் மைந்தரும் 4
மதுரைத் தமிழ்ச் சங்கச் சான்றோர், பெரும்புலவர்
இரா. இளங்குமரன்

எழுத்துச் சாரியை 8
ஆறுவிரல் ஐம்பொறி

வளையாபதியில் வாழ்க்கை நெறிகள் 10
முனைவர் மா. இராமச்சந்திரன்

புறமும் - மணிமேகலையும் 22
பி. தனம்

அறிவு வளர்ச்சியும் அறிவியல் தொழில் நுட்பமும் 24
முனைவர் சு. குழந்தைவேல் பன்னீர்செல்வம்

தஞ்சை வரலாற்றில்
இரண்டாம் சரபோஜி மன்னர் 27
முனைவர் பு. வேம்பரசி

வாசகர் வாசகம் 40

# இதழ்மணம்

மாதா, பிதா, குரு, தெய்வம் ஆகிய நான்கு வணங்குதற்குரியவர்களில், அறிவுடையோராக ஆக்கும் ஆசிரியரை வாழ்த்தும் கவிதை நல்ல சிந்தனை.

இரா. இளங்கோவனின் தமிழ் வளர்த்த தந்தையும் மைந்தரும் என்னும் கட்டுரை தமிழ் மொழிப் புலமை குறித்தும், அபிதான சிந்தாமணி என்னும் புத்தகப் பதிப்பிற்கு சிங்கார வேலு முதலியாரைத் தேடி அச்சுப் பதிப்பிற்கு உதவிய வள்ளல். பொன். பாண்டித்துரைச்சாமித் தேவர் அவர்களின் தமிழ் ஆர்வத்தையும் வெளிக்காட்டுவதாக அமைகிறது.

ஆறுவிரல் ஐம்பொறி அவர்களின் எழுத்துச் சாரியை என்னும் கட்டுரை எழுத்துக்களைத் தனித்தனியாக ஒலிக்கும்போது மாத்திரை அளவு குறையாமல் இருக்கும் எழுத்துச் சாரியை பற்றி தெளிவாக விளக்குகிறது.

வளையாபதியில் வாழ்க்கை நெறிகள் என்னும் முனைவர் மா. இராமச்சந்திரன் அவர்களின் கட்டுரை வளையாபதியின் சிறப்பையும், அந்நூலில் இடம்பெறும் நாவடக்கம், பொய்யாமை, கொல்லாமை, களவு செய்யாமை போன்ற அறநெறி பேணல், குருவருள் பெற்று மெய்யுணர்வு பெறுதல் போன்றவற்றை வாழ்வில் பெற்று உயர்வு பெற வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. பி. தினம் அவர்களின் புறமும் – மணிமேகலையும் என்னும் கட்டுரை இரட்டைக் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலையில் இடம்பெறும் பசிப்பிணியை, காலத்தால் முந்திய புறநானூற்றோடு ஒப்பிட்டு ஆய்ந்துள்ளது.

முனைவர் சு. குழந்தைவேல் பன்னீர்செல்வம் அவர்களின் அறிவு வளர்ச்சியும் அறிவியல் தொழில் நுட்பமும் என்னும் கட்டுரை இந்தியா வலுவான வல்லரசு நாடாக ஐந்து ஆதாரங்களைச் சுட்டி தொழில் நுட்பத் திட்டத்தைத் தொலை நோக்குடன் அணுக வேண்டும் என்பதையும் விளக்குகிறது.

தஞ்சை வரலாற்றில் இரண்டாம் சரபோஜி மன்னர் என்னும் முனைவர் பு. வேம்பரசி அவர்களின் கட்டுரை. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் தஞ்சையை ஆட்சி செய்த மராத்திய மன்னர் இரண்டாம் சரபோஜி அவர்களின் ஆட்சிப் பணியை விரிவாகப் பேசுகிறது. நிறைவாக வாசகர் கடிதங்கள் இடம் பெற்று இதழை மணக்கச் செய்கின்றன.

– முனைவர் க. சின்னப்பா

# தமிழ் வளர்த்த தந்தையும் மைந்தரும்

மதுரைத் தமிழ்ச் சங்கச் சான்றோர். பெரும்புலவர் **இரா. இளங்குமரன்**

அபிதான சிந்தாமணி என்பதொரு தொகைநூல். 1640 பக்க அளவுடையது. சிங்கார வேலு முதலியார் என்பவரால் தொகுக்கப்பட்டநூல். அகராதி ஒழுங்கில் சிறப்புக் குறிப்புகளைக் கொண்டது.

அந்நூலில், பகர வரிசையில், பாண்டித்துரைத் தேவர் என்னும் தலைப்பில் வந்துள்ள செய்தி.

இவர் இராமநாதபுரத்தைச் சேர்ந்த பாலவநத்தம் ஜமீன்தாரர். இலக்கிய இலக்கணங்கள் உணர்ந்தவர், தமிழபிமானி, மதுரையில் தற்காலம் தாபித்துள்ள தமிழ்ச் சங்கம் கண்டவர். வித்துவான்களை ஆதரித்து அவர்களைத் தமிழில் ஊக்க முண்டாக்குபவர். தக்க பரிசும் அளித்தவர். நானியற்றிய அபிதான சிந்தாமணியை அச்சேற்றிப் பிரசுரஞ் செய்வித்தவர். இவர் செய்த நூல்கள் சிவஞான சுவாமிகள் இரட்டை மணிமாலை, இராஜ ராஜேஸ்வரி பதிகம், சைவமஞ்சரித் திரட்டு, பன்னூற்றிரட்டு முதலியன.

சிங்காரவேலர் தாம் அபிதான சிந்தாமணி இயற்றியது பற்றியும் அதனை வெளியிட பட்ட பாடுகளும், பாண்டித்துரையார் உதவியதும் பற்றியும் முதற்பதிப்பின் முகவுரையில் வரையும் செய்தி வருமாறு.

நானிந்த அபிதான சிந்தாமணி என்னும் நூலைச் சற்றேறக்குறைய 1890 ஆம் வருஷங்களுக்கு முன் தொடங்கினேன்.

இந்நூல் இன்றைக்கு 131 பாரங்களுக்கு மேல் இராயல் எட்டுப் பக்கங்கள் கொண்ட உருவத்தில் சற்றேறக்குறைய லெட் இல்லாமல் 1050 பக்கங்கள் ஸ்மால் பைகாவில் முடிந்தது.

இதனை நோக்கும் அறிவாளர் இதனை நான் ஒருமுறை தனித்தனிக் கதையின் உருக்கொண்டு எழுதிப் பின்னொருமுறை அகராதி முறைப்படப் பெயர்த்தெழுதிப் பின்னதனைச் சுத்தப்பிரதியாக்கிய பிரயாசையை அறியாதிரார்.

இந்நூல் இவ்வாறு ஒருவாறு முற்றுப் பெற்றபின் இதனைச் சென்னையில் இருந்த பிரபுக்கள் சிலரிடம் காட்டினேன். அவர்கள் இத்தகைய நூல் தமிழில் இன்றியமையாததே. அதனை வெளியிடுக என்றனரேயன்றி அச்சிட்டு வெளிப்படுத்த ஒன்றும் கூறிற்றிலர்.

பின்பு யாழ்ப்பாணம் மகா கனகசபை பிள்ளை பி.ஏ.,பி.எல் அவர்களிடம் இதில் ஒரு பாகத்தைக் காட்டினேன். அவர் இஃது அரிய தமிழ்க் கதை அகராதி, இதனைச் சென்னையிலுள்ளார் ஆதரிக்க வேண்டும் என ஒரு பத்திரம் எழுதித் தந்தனர். புரொபஸராயிருந்த சேஷகிரி சாஸ்திரியார் அவர்களிடம் காட்டினேன். அவர் இதனையொப்ப நானும் ஒரு நூல் எழுதிக் கொண்டு வருகிறேன் என்று கூறினரேயன்றி வேறொன்றும் கூறவில்லை.

அவர் கருத்தென்னோ அறியேன்.

"அதற்குப்பின் இதனைச் சென்னை கியூரேடரும் பச்சையப்பன் கல்விச் சாலை தரும விசாரணையின் எடுகேஷனல் டிரஸ்டுமாகிய பிரம்மஸ்ரீ வ. கிருஷ்ணமாசாரியாரிடம் காட்டினேன். அவர் பல அச்சாபிசுக்காரர்களிடம் காட்டி செலவு அதிகம் பிடிக்கும் எனக் கூறி விடுத்தனர்".

"கோவிந்த நாயகர் கலாசாலைகளில் அமர்ந்து செல்வாக்கில்லாததால் வருவாய் மட்டாக அச்சிடப் பொருளில்லாது இதனைச் சஞ்சிகை வாயிலாக வெளியிட ஒரு அறிக்கைப் பத்திரம் வெளியிட்டேன். அதன் பொருட்டுப் பலரிடம் கையொப்பம் கேட்டேன்".

"அவர்கள் இது தொடர்ந்த கதையாயின் வாங்கலாம் எனவும் சிலர் முற்றுறப் பல நாள் பிடிக்கும் எனவும் சிலர் கையொப்பமிட்டும் சென்றனர். இச்சோர்வால் எனக்கு அக்காரியத்தில் ஊக்கம் செல்லாது 'நூலைப் புறக்கணித்தோமா' என எண்ணினேன். இதற்குள் சிலர் இதனை ஒத்த சிறுநூல்கள் இயற்றினர். அதனைக் கண்டும் திருவுளப் பாங்கென்றிருந்தேன். இது நிற்க.

நான் வழிபடு கடவுளாகிய மலைமகள் நாயகர் உள்ளக் குறிப்போ அல்லது நான் முதன்முறை வெளியிட்ட அறிக்கைப் பத்திரிகையோ அல்லது இரண்டாம் முறை வெளிப்படுத்திய அறிக்கையோ, மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பிரசிடெண்டும் பாலவனத்தம் ஜமீன்தார் அவர்களும், தமிழ் வளர்த்த ஸ்ரீமான் பொன்னுச்சாமி தேவரவர் அவர்களின் திருக்குமாரரும், என் தளர்ச்சிக்கண்டு ஊன்றுகோல் போல்பவருமாகிய ஸ்ரீமான் பொ. பாண்டித்துரைச் சாமித் தேவர் அவர்களின் கைப்பட்டுத் தாமே சென்னைக்கு வந்து நான் எழுதிய நூலைக் கண்டுகளித்து, அதனை மதுரைத் தமிழ்ச் சங்க அச்சியந்திர சாலையில் அச்சிடுவான் எண்ணி என்னிடமிருந்த பிரதிகளைத் தாமே மதுரைக்கு எடுத்துச் சென்று அவ்விடத்தில் நாம் எழுதிய அனைத்தையும் பலரைக் கொண்டு சுத்தமாய் எழுதுவித்து மீண்டுமவற்றைச் சென்னையிலுள்ள அச்சுயந்திரசாலையில் என் முன்னிலையில் அச்சிட உத்தரவளித்து அப்போதைக்கப்போது பொருளுதவி செய்து வந்தார். அவர்கள் அருஞ்செயலை இப்புத்தகத்தை நோக்கும் அறிவாளிகள் புகழாமற்போகார் என வரைந்துள்ளார்.

இப்பெரிய தொகுப்பை அவர் செய்துமுடித்து வெளியிடக் கூடாமல் போய் துயரும், தமிழகப் பெருமக்களை அன்றி ஈழப் பெருமக்களையும் கண்டு வெளியிட முயன்ற முயற்சி, கையொப்பம் பெற்றேனும் அச்சிட எண்ணிய அவலமிக்க ஆர்வம், நூலை கறையான் புற்றில் இடுவோமா? கையில் இருந்து என்ன பயன் என ஏங்கிய துயர், கேளாதே — தனித்து வேண்டாதே இருந்தும் தாமே தேடிவந்து தாமே தக்கவாறு படியெடுப்பித்துத் தமிழ்ச் சங்க உதவியால் வெளியிடினும் ஆசிரியர் பார்வையிலே நூல் வெளிவரவேண்டும் என்னும் தெளிவுடன் அச்சிடத் தந்த அருமை, அதற்கு வேண்டும் தொகையை அப்போது வழங்கிய வண்மை இவற்றை எண்ணின் அபிதான சிந்தாமணி வெளியீட்டு வரலாறு புலப்படும். நூல் ஆசிரியர் பாடும், நாட்டு மக்கள் அறிஞர்கள் செல்வர்கள் நிலையும், பாண்டித்துரையார் தாமே வந்து கொள்ளெனக் கொடுத்த கொடையும் எண்ணின் அந்நாள் தமிழ்வளர்த்தார் தனிமேம்பாடு புலப்படும்.

புராண இதிகாச மிகுதி, தலபுராணம், உலகவழக்கு இவற்றையெல்லாம் ஒருங்கு கொண்ட தொகுப்பு அது.

வேதப் பொருள் விளக்கம், பல மஹாபுராணக் கதைகள், ஸ்தலபுராணக் கதைகள், பாரதாதி இதிஹாசங்கள், ஸ்மிருதி விஷயங்கள், பலநாட்டுச் சமைய நிச்சயங்கள், பலஜாதி விஷயங்கள், பரதம், இரத்தினோற்பத்தி, வைத்யம், சோதிடம், விரதம், நிமித்தம், தாமை, கனாநிலை, பல சமய அடியராழ்வார்களின் சரிதைகள், பல வித்வான்களின் சரிதைகள், சிவாலய விஷ்ணுவாலய மான்மியங்கள், சூர்ய சந்திர ராக்ஷச இருடிகளின் பரம்பரைகள், சைவ வைஷ்ணவ மாத்வ ஸ்மார்த்த சமய வரலாறுகள், சைவாதீன பண்டார சந்நதிகளின் மடவரலாறுகள், இந்துதேசம் ஆண்ட புராதன அரசர் வரலாறுகள் முதலிய பல அரிய விஷயங்கள் இதில் அடங்கியுள்ளதாக ஆசிரியர் பட்டியலிட்டுக் காட்டுகிறார்.

சிங்கார வேல் முதலியார் மகனார் சிவப்பிரகாச முதலியார் இரண்டாம் பதிப்பை வெளியிட்டார். முதற்பதிப்பு 1050 பக்கம் அச்சிட்டபின் சேர்க்க வேண்டுவ சேர்த்து 1634 பக்கமாக விரிந்து இரண்டாம் பதிப்பு வந்தது. மூன்றாம் பதிப்பு அப்படியே ஒளிப்படிப்பதிவாக 1982 ஆம் ஆண்டு, ஆசியன் கல்விப்பணி புதுதில்லி வழியாக வெளிவந்தது.

அறிஞர் அண்ணா ஒருமுறை சிறைச் சாலைக்குச் செல்லும்போது, புலவர் அருணகிரிநாத முதலியார், "இந்நூல் உங்களுக்குச் சிறையில் பொழுதுபோக உதவியாக இருக்குமென அபிதான சிந்தாமணியை வழங்கினார் என்பதை நினைவு கூர்ந்துள்ளார்" என்பது நம் நினைவில் தோன்றுகின்றது. வள்ளல் பாண்டித்துரை அவர்கள் தந்த அந்நாள் கொடை, காலத்தை வென்று விளங்கும் காட்சியல்லவோ இதுநாளும் அபிதான சிந்தாமணி என்னும் கதைக் களஞ்சியமாக வாய்த்த கலைக்களஞ்சியம்.

# எழுத்துச் சாரியை

ஆறுவிரல் ஐம்பொறி

எழுத்துக்களை ஒலிக்கும் கால அளவை மாத்திரை என்று இலக்கணம் கூறுகிறது. ஒரு மாத்திரை என்பது இயல்பாகக் கண்ணிமைக்க ஆகும் நேரத்தைக் குறிக்கிறது. இயல்பாக கை நொடிக்க ஆகும் நேரத்தையும் குறிக்கிறது.

"இயல்பெழு மாந்த ரிமை நொடி மாத்திரை." நன்னூல் - 100

ஒரு மாத்திரையின் கால அளவு எப்போதும் ஒரே அளவில் (மிகைப்படாமலும், குறைப்படாமலும்) அமையவே இயல்பெழு என்ற சொல்லை நன்னூல் கூறியுள்ளது. அ, ஆ, இ, ஈ முதலிய எழுத்துக்களைத் தனித் தனியாக ஒலிக்கும்போது மாத்திரையின் அளவு சிறிய அளவில் கூடவோ அல்லது குறையவோ வாய்ப்புள்ளது. தனி எழுத்தை ஒலிக்கும் போது மாத்திரையின் அளவு சிறிதும் கூடாமல் இருக்கவும், குறையாமல் இருக்கவும் ஒரு உத்தியை நன்னூல் கையாண்டுள்ளது. அதுவே எழுத்துச் சாரியை ஆகும்.

ஆ என்ற எழுத்தை ஒலிக்கும்போது காரம் என்ற சாரியை சேர்த்து ஆகாரம் என்று சொன்னால் ஆகாரத்திலுள்ள ஆ என்ற எழுத்து மிகச் சரியாக இரண்டு மாத்திரை ஒலிக்கிறது. ச என்ற எழுத்தை ஒலிக்கும் போது கரம் என்ற சாரியை சேர்த்து சகரம் என்று சொன்னால் சகரத்திலுள்ள ச என்ற எழுத்து மிகச் சரியாக ஒரு மாத்திரை ஒலிக்கிறது.

தனி எழுத்தை ஒலிக்கும் போது மாத்திரை குறைபடவோ, அல்லது மிகைப்படவோ கூடாது என்பதற்கு கரம், காரம், கான் முதலிய எழுத்துச் சாரியைகளை நன்னூல் கூறியுள்ளது.

"மெய்க ளகரமும் நெட்டுயிர் காரமும்

ஐயௌக் கானு மிருமைக் குறிலிவ்

விரண்டொடு கரமுமாஞ் சாரியை பெறும் பிற" - நன்னூல் - 126

இந்த நூற்பாவில் மெய்களகரமும் என்று உள்ளதால் க், ங், ச், ஞ் முதலிய மெய்கள் ஒலிக்கும் போது உகரம் சேர்ந்து (க்கு) மாத்திரை மிகுபடுவதால் மெய்களை ஒலிப்பதற்குச் சாரியை

பயன்படுத்தப்பட்டது. இருமை குறில் (உயிர்க் குறில், உயிர்மெய்க் குறில்) என்று உள்ளதால் உயிர்மெய் நெடில்கள் சாரியை பெறவில்லை என்பதும் உயிர்மெய்க் குறில்கள் சாரியை பெறும் என்பதும் தெரிகிறது.

அகரம், ஆகாரம், இகரம், ஈகாரம், உகரம், ஊகாரம், எகரம், ஏகாரம், ஐகான், ஒகரம், ஓகாரம், ஔகான் முதலியவை எழுத்துச் சாரியை பெற்று வரும் தனி எழுத்துக்கள்.

எகர வினாமுச் சுட்டின் முன்னர் – நன்னூல் – 163
எகர ஒகரத் தியற்கையு மற்றே – தொல். எழுத்து – 42
இகர உகரம் இசைநிறை வாகும் – தொல். எழுத்து – 36

வணக்கம் என்ற சொல்லைச் சொல்லும்போது இச்சொல்லில் உள்ள எழுத்துக்களின் மாத்திரை அளவு கூடவோ, குறையவோ வாய்ப்பில்லை. இதனால் நன்னூல் தனி ஓர் எழுத்தின் முன் சாரியை என்று இரண்டு, மூன்று எழுத்துக்களைச் சேர்த்தது.

பிற்காலத்தவர் அனா, ஆவன்னா, இனா, ஈயன்னா, உனா, ஊவன்னா, எனா, ஏயன்னா, ஐயன்னா, ஒனா, ஓவன்னா, ஔவன்னா, ஃகேனா என்று சாரியை சேர்த்தனர். தற்காலத்தில் எழுத்துச் சாரியை இல்லாமலேயே தனி எழுத்தை ஒலிக்கின்றனர்.

இசைத்தல், அழைத்தல், பண்டமாற்றுதல் (விற்கக் கூவுதல்), முறையிடுதல், புலம்புதல், வாழ்த்துதல், வசைபாடுதல் முதலிய இடங்களில் மாத்திரை மிகைப்படலாம் என்ற விதி விலக்கையும் நன்னூல் கூறியுள்ளது.

"ஆவியு மொற்று மளபிறந் திசைத்தலும்
மேவு மிசைவிளி பண்டமாற் றாதியின்" – நன்னூல் – 101

இவ்விதி விலக்கிலிருந்து தனி எழுத்துக்களைச் சரியாக ஒலிக்க வேண்டும் என்பது புலனாகிறது.

"பகுதி விகுதி யிடைநிலை சாரியை
சந்தி விகார மாறினும் ......................." நன்னூல் – 133

இந்நூற்பாவில் உள்ள சாரியை சொற்சாரியை என்பது குறிப்பிடத்தக்கது.

இன்று எழுத்துச் சாரியைகளைப் பயன்படுத்திப் பேசுவோரும், எழுதுவோரும் மிகச் சிலரே உள்ளனர்.

❁❁❁❁❁❁❁❁

# வளையாபதியில் வாழ்க்கை நெறிகள்

முனைவர் மா. இராமச்சந்திரன்

## முன்னுரை

ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான வளையாபதி முழுமையாகக் கிடைக்கவில்லை. பிற நூல்களில் வளையாபதிப் பாடல்கள் என்று மேற்கோளாகக் காட்டப்பெற்ற பாடல்களைத் தொகுத்து வளையாபதி வெளிவந்துள்ளது. கிடைத்துள்ள பாடல்கள் கருத்துச் செறிவுடையனவாக விளங்குகின்றனவேயன்றிக் கதைப் போக்கைச் சுட்டுவனவாக இல்லை. மேற்கோள் பாடல்கள் என்பதால் கதைப்போக்கு இடம் பெறாமல் போயிருக்கலாம். ஆயினும் வைசியபுராணம் கூறும் வைரவாணிகன் கதை வளையாபதியின் கதையாகக் கருதப்படுகிறது. அறிஞர்களுக்கிடையில் இதில் கருத்து வேறுபாடுகள் உள்ளன. வளையாபதிப் பாடல்கள் மானிட சமூக உயர்வுக்கு உணர்த்தும் வாழ்க்கை நெறிகளைத் தொகுத்துரைப்பது இக்கட்டுரையின் நோக்கம்.

## உயர்பிறவிப்பயன்

ஆருயிர் முறை வழி படூஉம் என்பது தமிழ்ச்சான்றோர் கணிப்பு. வினைகளுக்கு ஏற்றவாறு உயிர் பிறவி எடுத்துப் பல யாக்கைகளைத் தாங்குகின்றது என்ற நம்பிக்கை வளையாபதியிலும் வெளிப்படுகிறது. அவ்வாறு தோன்றும் பிறவிகள் துன்பத்திற்கே ஏதுவாகின்றன. பல பிறப்புகளினால் துன்புறும் உயிர் எடுக்கும் மானிடப் பிறவி கிடைத்தற்கரிய பிறவியாகும். உயிர்தாங்கும் யாக்கைகளுள் மனிதயாக்கையே உயர்ந்தது என்பதை,

"வினைபல வலியி னாலே வேறுவே றியாக்கை யாகி
நனிபல பிறவி நன்னுட் டுன்புறூஉ நல்லு யிர்க்கு
மனிதரி னரிய தாகுந் தோன்றுதல் தோன்றி னாலு
மினியவை நுகர வெய்துஞ் செல்வமு மன்ன தேயாம்"

என்று குறிப்பிடுகின்றது. மனிதனாகப் பிறந்தாலும் செல்வம் இருந்தால்தான் இவ்வுலகில் இன்பம் பெற முடியும் என்பதையும் காட்டுகின்றது.

பெறுதற்கரியது மானிட யாக்கை. இது பிறவியால் வாய்க்கின்றது. பிறவியால் மானிட யாக்கை பெற்றவர்கள் எல்லோரும் மக்கள் என்று கருதத்தக்கவர் அல்லர். மானுட யாக்கை பெற்றாலும் மக்கள் என்ற தகுதியைப் பெறுவதற்குச் சில பண்புகள் தேவைப்படுகின்றன. கல்வி கேள்விகளில் சிறந்து, மெய்யறிவு பெற்று, நன்னெறியில் நிற்கும் பண்புகளைப் பெற்றவர்கள்தான் மக்கள் என்று கருதப்படுவர்.

"உயர்குடி நனியுட் டோன்ற லூனமில் யாக்கை யாதன்
மயர்வறு கல்வி கேள்வித் தன்மையால் வல்ல ராதல்
பெரிதுண ரறிவே யாதல் பேறநற் கோட லென்றாங்
கரிதிவை பெறுத லேடா பெற்றவர் மக்க ளென்பார்"

என்று கூறுவதன் வாயிலாக மனிதனாகப் பிறந்து மனிதனாக வாழ்வதே உயர்பிறவிப் பயன் என்பதை உணர்த்துகிறது.

**கற்புநெறி**

நமக்குக் கிடைத்துள்ள வளையாபதிச் செய்யுள்களை வைத்துப் பார்த்தால், அவற்றுள் பாதியில் உலக வாழ்க்கையின் இன்பங்களை மறுத்துத் துறவறத்தைப் போற்றுவது தெரிகிறது. பெண்கள்மேல் குறிப்பாக வெறுப்புக் காட்டுகிறது. கற்பு ஒன்றை மட்டுமே போற்றுவதாகத் தெரிகிறது என்று தமிழ் சுவடியில் குறிப்பிடுவார். துறவறநெறி போற்றும் சமணம் சார்ந்ததாயினும் வளையாபதி இல்லறம் நடத்தும் ஆணும் பெண்ணும் பேண வேண்டிய கற்புநெறியைக் கவினுறப் போதிக்கின்றது.

மனைவியோடு மகிழ்ந்திருந்து இனிய இல்லறம் நடத்தி நன்மக்களைப் பெற்று வாழ்வதே ஆண்மகனுக்குரிய தலைமைக் குணமாகும். அவ்வாறின்றிக் கற்புநெறி தவறிக் கணிகை மகளிரொடு களிப்புறுவது ஆடவருக்குக் பெருமையாகாது என்பதை,

"மக்கட் பயந்து மனையற மாற்றுதல்
தக்க தறிந்தார் தலைமைக் குணமென்ப
பைத்தர வல்குற் படிற்றுரை யாரொடு
துய்த்துக் கழிப்பது தோற்றமொன் றின்றே"

என்றுரைக்கின்றது. இவ்வாறு அறநெறியால் மணந்து கொண்ட மனைவியைப் பேணி கற்பு விரதம் பூண்டு வாழும் ஆண்மகனை ஊரும், நாடும் உவந்து போற்றும். அதுமட்டுமின்றி,

> "வீர வென்றி விறன்மிகு விண்ணவர்
> சீரி னேத்திச் சிறப்பெதிர் கொள்பவே"

என்றும் உரைகின்றது. ஆணும் பெண்ணும் இணைந்து நடத்துகின்ற இல்லறம் பெண்ணினாலே தெய்வத்தன்மை உடையதாகிறது. எனவே பெண்ணின் பெருமைதான் இல்லறத்தின் பெருமையாகப் பரிணமிக்கின்றது. பெண்ணின் பெருமைக்குப் பெருந்துணையாவது கற்புநெறியேயாகும். பெண்கள் பேணும் கற்புநெறி குடும்பத்தைக் கோவிலாக்குகின்றது. கற்புநெறி வழுவாமல் இல்லறம் நடத்தும் பெண்களை உலகம் போற்றிப் புகழும் என்பதை,

> "நாடு மூரு நனிபுகழ்ந் தேத்தலும்
> பீடு றும்மழை பெய்கெனப் பெய்தலும்
> கூட லாற்றவர் நல்லது கூறுங்கால்
> பாடு சான்மிகு பத்தினிக் காவதே"

என்று கூறுகின்றது. ஆணும் பெண்ணும் கற்பு நெறி பேண வேண்டும். கற்புடைப் பெண்டிர் மழைவளம் தரும் சிறப்புடையவராகிப் போற்றப்படுவர்.

**பொருட் செல்வமும் மக்கட் செல்வமும்**

இல்லறத்தை ஏற்றமுடன் நடத்துவதற்குப் பொருட் செல்வம் தேவைப்படுகின்றது. அதே வேளையில் இல்லறத்தின் பயனாக மக்கட் செல்வம் உள்ளது. எனவே இல்லறத்தார்க்குப் பொருட் செல்வமும் மக்கட் செல்வமும் இன்றியமையாதன என்று வளையாபதி வற்புறுத்துவதைக் காணலாம். குடிப்பெருமை, கல்விச் சிறப்பு பெறுவதற்கும் சுற்றத்தாரின் பசியைப் போக்குவதற்கும் கருவியாக உள்ள பொருளைத் தேடிக் கொள்ள வேண்டும் என்பதை,

> "குலந்தருங் கல்வி கொணர்ந்து முடிக்கும்
> அலந்த கிளைக ளழிபசி தீர்க்கும்
> நிலம்பக வெம்பிய நீள்நரம் போல்ப்
> புலம்பில் பொருள்தரப் புல்கன்மை யுண்டோ?"

என்றுரைக்கின்றது. பொருளற்ற வறியவர்க்கு வாழ்வில் மதிப்பும் மரியாதையும் இல்லை என்பதை,

> "பெண்டிர் மதியார் பெருங்கிளை தானது
> கொண்ட விரதர் குறிப்பினி எக்குப
> வெண்டறை நின்று வெறுக்கை யிலராயின்
> மண்டினர் போவர்தம் மக்களு மொட்டார்"

என்று எடுத்துரைக்கின்றது. பொருளற்றவர்களின் குலப்பெருமை இருளில் எழுதப்பட்ட கண்மை போன்று வெளியில் தெரியாமல் போகும். கைப்பொருள் இல்லார்க்கு அவையிலே மதிப்பில்லை என்பதை,

> "சொல்லவை சொல்லார் சுருங்குபு சூழ்ந்துணர்
> நல்லவை யாது நனிமதிப் பாரலர்"

என்று காட்டுகிறது. அறிவிற்சிறந்தோராயினும் வறியவர்க்குச் சிறப்பில்லை என்பதைக் காட்டிய வளையாபதி பணம் படைத்தோர் பெறும் மதிப்பையும் சுட்டிக் காட்டுகிறது.

> "தொழுமக னாயினுந் துற்றுடை யானைப்
> பழுமரஞ் சூழ்ந்த பறவையிற் சூழ்ப
> விழுமிய ரேனும் வெறுக்கை யுலந்தாற்
> பழுமரம் வீழ்ந்த பறவையிற் போப"

என்ற பாடல் பழுத்த மரத்தைப் பறவைகள் சூழ்வது போலப் பணம் படைத்தவனைச் சுற்றி பெருங்கூட்டம் இருக்கும் என்பதைக் காட்டுகின்றது.

பொருட்செல்வம் நிறைந்தும் மக்கட் செல்வம் இல்லாதார்க்கு வாழ்வில் சிறப்பில்லை என்பதை,

> "பொறையிலா அறிவு போகப்
> புணர்விலா இளமை மேவத்
> துறையிலா வசை வாவி
> துகிலிலாக் கோலத் தூய்மை
> நறையிலா மாலை கல்வி
> நலமிலாப் புலமை நன்னீர்ச்
> சிறையிலா நகரம் போலும்
> சேயிலாச் செல்வ மன்றே"

என்று கூறுவதன் வழி மழலைச் செல்வத்தின் மகிமையைப் புலப்படுத்துகிறது.

இவ்வுலக இன்பங்கள் நிலையில்லாதன. இவற்றில் பற்றுக் கொண்டு பரிதாபத்தில் ஆழ்கிறான் மனிதன். இந்தநிலை மாறி துறவு நெறி பேண வேண்டும் என்பது சமணர் நெறி. இதனை உணர்ந்த வளையாபதியும் வாழ்க்கையில் இளமை, யாக்கை, செல்வம் போன்றன நிலையாமை உடையன என்பதைக் காட்டுகிறது. மேலும் நிலையில்லாத இவற்றை நிலைத்த புகழுக்கு ஏதுவாக்கிக் கொள்ள வேண்டும் என்றும் வற்புறுத்துகிறது.

நன்முடி சூடி நானிலம் ஆளும் வேந்தன் புகழ்கூட ஒரு நாளில் இகழ்ச்சிக்குள்ளாகிவிடுவதை உணர்ந்து நன்னெறியில் மனிதன் வாழவேண்டும் என்பதை,

"வித்தகர் செய்த விளங்கு முடிகவித்தார்
மத்தக மாண்பழிதல் காண்வாழி நெஞ்சே
மத்தக மாண்பழிதல் கண்டால் மயங்காதே
உத்தம நன்னெறிக்க ணில்வாழி நெஞ்சே
உத்தம நன்னெறிக்கண் நின்றூக்கஞ் செய்தியேல்
சித்தி படர்த நெறிவாழி நெஞ்சே"

என்று உணர்த்துகிறது.

எழிலான தோற்றமும் எடுப்பான நடையும் கொண்டு இறுமாந்திருக்கின்ற இளமை நில்லாது என்பதை,

"கோற்கண் ணெறிகாட்டக் கொல்கூற் றுழையதா
நாற்ப நிகந்தா நரைத்தாறும் வந்ததினி
நீத்த றுணிவா நிலையா திளமையே"

என்றுரைக்கிறது. காலப்போக்கில் உடம்பில் பல மாறுதல்கள் உண்டாகின்றன. அழகு அழிகின்றது; பார்வை குறைகின்றது; நடை தளர்கிறது; ஊன்றுகோல் வழிகாட்ட முதுமை ஆட்கொள்கிறது. இளமையும் யாக்கையும் நிலையில்லாதது என்பதை உணர்ந்து மனிதன் இளமைப் பருவ யாக்கையால் ஏற்றம் தேடிக் கொள்ள வேண்டும். நிலையில்லா இளமைப் பருவத்தில் நிலைத்த கதிபெறுவதிற்குரிய செயல்களைச் செய்து கொள்ள வேண்டும். உழவர்கள் மறுசாகுபடிக்குத்

தேவையான விதையைக் கிடைத்த விளைச்சலிலிருந்தே சேமித்துக் கொள்வர். அதனைப் போன்று அடுத்த பிறவிக்கான அறம் என்ற வித்தினை இப்பிறவியில் பெற்றுள்ள இளமை, யாக்கையால் சேகரித்துக் கொள்ள வேண்டும் என்பதை,

“இளமையு நிலையாவால் இன்பமும் நின்றவல்ல
வளமையு மஃதேபோல் வைகலுந் பவெள்ளம்
உளவென நினையாதே செல்கதிக் கென்றுமின்றும்
விளைநில முழுவார்போல் வித்துநீர் செய்து கொண்மின்”

என்று அறிவுறுத்துகின்றது. இவ்வாறு அழிந்து போவனபற்றிக் கவலைப்படாமல் அறம் பெருக்கி செல்லும் வழிக்குத் துணை சேர்த்துக் கொள்ள வளையாபதி வழிகூறுகின்றது.

இகவாழ்வுக்கு இன்றியமையாததாயினும் செல்வம் நிலையில்லாதது என்பதை மக்களுக்கு வளையாபதி உணர்த்துகின்றது. செல்வத்தை எளிதாகச் சேர்க்க முடியாது. கஷ்டப்பட்டு சேர்க்கும் பொருள் விரைவாக நீங்கிவிடும். வெள்ளம், மறதி, வேந்தர், தீ, பங்காளிகள், திருடர் என்று பலவகையில் செல்வத்திற்குப் பங்கம் வருகின்றது. பொருளைப் பறிக்கும் பொருட்டு உயிர்க்கொலைகளும் நடைபெறுகின்றன. இப்படிப்பட்ட நிலையில்லாப் பொருள்மீது பற்றுவைப்பதால் துன்பமே விளையும். அதனை விட்டொழிப்பவர்க்கு இன்பம் நிலைக்கும். இதனால் பொருட்பற்று ஒழித்தவர் பெருமைக்குரியவர் என்பதை,

“புன்மை யுறுக்கும் புரையில் பொருளைத்
துன்னா தொழிந்தார் துறவோ விழுமியதே”

என்று கூறுகின்றது. நிலையில்லாத பொருளைச் சேர்த்து வைக்க நினைப்பது மடமையாகும். அருளைப் பெருக்கும் வழியாகப் பொருளைக் கருதுவதுதான் பெருமையாகும். உறுதிப் பொருளான அருளைப் பெறுவதற்கு நிலையில்லாச் செல்வம் பயன்பட வேண்டும். அதன் மூலம் வீடு பேற்றினைப் பெற வேண்டும். இதனை,

“பொருளை பொருளாப் பொதிந்தோம் பல்செல்லாது
அருளைப் பொருளா வறஞ்செய் நல்வேண்டும்
அருளைப் பொருளா வறஞ்செய் நுளார்கள்
இருளில் பெய்தா ஷென்னோ நமறங்காள்”

என்ற பாடல் உணர்த்துகிறது.

## நாவடக்கம்

மனித வாழ்வை மேம்படுத்துவதற்குப் புலன் அடக்கம் தேவை. மெய், வாய், கண், மூக்கு, செவியாகிய ஐம்பொறிகளுள் வாயை வசிப்பிடமாகக் கொண்டது நாக்கு. மனிதன் அடையும் பல துன்பங்களுக்குக் காரணமாக நாக்கு விளங்குகின்றது. வாயிலிருந்து வெளிப்படும் சொல் ஒருவனை வாழவும் வைக்கின்றது; தாழவும் பண்ணுகின்றது. வளம் பெருக்கவும் செய்யும்; சிறையில் அடைக்கவும் செய்யும். இவ்வாறு நாவினால் நன்மையும் தீமையும் உண்டாகின்றன. இதனை உணர்ந்து மனிதன் நாவடக்கத்தில் அக்கறை செலுத்த வேண்டும் என்பதை,

"ஆக்கப் படுக்கு மருந்தவனாய்ப் பெய்விக்கும்
போக்கப் படுக்கும் புகைநரகத் துய்விக்கும்
காக்கப் படுவன இந்திரிய மைந்திலும்
நாக்கல்ல தில்லை நனிபேணு மாறே"

என்று வற்புறுத்துகிறது. நாவடக்கம் என்னும் விரதம் மேற்கொண்டால், பொய் பேசுதல், புறங்கூறுதல், பிறரைப் பழித்து பேசுதல், புலால் உண்ணுதல் போன்ற அதர்மச் செயல்கள் யாவும் நீங்கிவிடுகின்றன. நாவடக்கத்தை அறிவுறுத்தும் வகையில்,

"பொய்யன் மின்புறங் கூறன்மின் யாரையும்
வையன் மின்வடி வல்லனை சொல்லிநீர்
உய்யன் மின்னுயிர் கொன்றுண்டு வாழுநாள்
செய்யன் மின்சிறி யாரொடு தீயன்மின்"

என்றுரைக்கின்றது.

## பொய்யாமை

வாய்மை அறங்களுள் சிறந்தது. பொய்மை தீயவற்றுள் பொல்லாதது. இதனால் பொய்யாமை எல்லா அறங்களுள்ளும் உயர்ந்தது. எனவே பொய்யாமை என்னும் அறம்பற்றி மானிடர் உய்வு பெற வேண்டும். பொய்நீக்கி வாய்மை பேணி வாழுபவர்க்கு இம்மை வாழ்வும் மறுமை வாழ்வும் சிறப்பாக அமையும் என்பதை,

"பொய்ப்பி னீங்குமின் பொய்யின்மை பூண்டுகொண்
டைய மின்றி யறநெறி யாற்றுமின்
வைகல் வேதனை வந்துற லொன்றியிற்
கௌவை யில்லுல மெய்துதல் கண்டதே"

என்று காட்டுகின்றது. பொய்சொல்லிப் பிழைப்பவர்க்குக் கல்வியால் பெறும் அறிவும் கைப் பொருளான செல்வமும் மறைந்து துன்பங்கள் பெருகும் என்பதை,

"கல்வி யின்மையுங் கைப்பொருள் போகலு
நல்லில் செல்லல்க ளானவி வுண்மையும்
பொய்யில் பொய்யொடு கூடுதற் காகுதல்
ஐய மில்லை யதுகடிந் தோம்புமின்"

என்றுரைக்கின்றது.

**கொல்லாமை**

நல்ல துணைகளோடு இவ்வுலகில் இன்பமாக வாழ்வதற்கும் பிறவித்துயர் ஏற்படாமல் இருப்பதற்கும் கொல்லாமை என்னும் விரதம் அவசியம் என்பது வளையாபதியின் கருத்தாகும். இம்மைச் சிறப்பும் வீடு பேற்றுச் சிறப்பும் தருவதாகக் கொல்லாமை விளங்குகின்றது. இதனை உணர்ந்து மனிதர்கள் செயல்பட வேண்டும் என்பதை,

"உலகுடன் விளங்கவுயர் சீர்த்திநிலை கொள்ளின்
நிலையில்கதி நான்கினிடை நின்றுழலு மாறும்
அலைவுறுப தஞ்சிறுயிர் அஞ்சவரும் வஞ்சக்
கொலையொழிமி னென்றுமுனி கூறினரு நீத்தார்"

என்றுரைக்கின்றது. கொன்றால் பாவம் தின்றால் போச்சு என்ற உலகினரின் குதர்க்க வாதத்தை எதிர்க்கும் வகையில் கொன்றாலும் பாவம்; தின்றாலும் பாவம் என்று வளையாபதி உரைக்கின்றது. ஊன் உண்பவனின் ஊனாசை நாளுக்குநாள் மிகுந்து கொண்டு போகும். அதனால் உயிர்க் கொலைபுரிவோன் அதிக உயிர்களைக் கொல்கிறான். இதனால் ஊன் உண்பவனும் உயிரைக் கொல்பவனும் ஒரே பாவத்தைச் செய்தவர் ஆகின்றனர்.

எனவே இருவரும் பாவிகளே. இதனை உணர்ந்து கொல்லாமையைக் கடைபிடிக்க வேண்டுவதாக,

"நகாவுயிர்கொல் வானின் மிகாமையிலை பாவம்
அவாவினைவி லுண்பான் புலால்பெருகல் வேண்டும்.
புகாவலைவி லைக்காய்ப் பொறாமைபிற வூன்கொள்
றவாவினையில் விற்பாலு மாண்டுருகவே வேண்டும்"

என்ற பாடல் உள்ளது. மாமிசம் உண்பது தம் சுற்றத்தை அடித்துத்

தின்பதற்குச் சமம் என்பதை,

"அறவகை யோரா விடக்கு மிசைவோர்
குறைவின்றித் தஞ்சுற்றந் தின்றன ராவார்"

என்று இடித்துக் காட்டுகின்றது. கொல்லாமை, புலால் உண்ணாமை என்னும் நெறிநின்று உயர வழிகாட்டுகிறது.

**களவு செய்யாமை**

பிறர்பொருளைத் திருடும் களவு பஞ்ச மாபாதகங்களில் ஒன்று. இந்த இழிசெயலைக் கருதாமல் மனிதன் வாழ வேண்டும் என்பதைக் கள்ளன்மின் களவாயின யாவையும் என்று கூறுகிறது. களவெடுத்த பொருட்களால் நன்மை விளையும் என்று கருதக்கூடாது. அதனால் கடுந்தீங்கே ஏற்படும். களவு செய்த குற்றத்திற்காகக் கை கால்களைக் குறைக்கும் கடுந்தண்டனைக்கு ஆளாகி அல்லல்பட நேரிடும் என்பது,

"பீடில் செய்திக ளார்தளை விற்பிறர்
வீடில் பல்பொருள் கொண்ட பயனெனக்
கூடிக் காலொடு கைகளைப் பற்றிவைத்
தோட லின்றி யுலையக் குறைக்குமே"

என்று பாடலில் குறிப்பிடப்படுகின்றது.

**அன்னதானச்சிறப்பு**

தானங்கள் பலவாகும். அவற்றுள் அன்னதானமும் ஒன்று. அற்றவர், அலர்ந்தவர்களின் பசியைப் போக்கும் அன்னதானம் அனைத்துத் தானங்களிலும் உயர்ந்தது என்பதை,

"அற்றமில் தான மனைப்பல வாயினும்
நற்றவிழ் ஒவ்வாத் துணிவென்னு மாறே"

என்றுரைக்கின்றது.

**இல்லறத்தில் தவநெறி**

இல்லறம் பேணி நற்றவம் புரிவோர் உயர் பிறப்பும் வீடுபேறும் அடைவர். இதனால் இல்லறத்தில் இருப்போரும் நற்றவம் செய்ய வேண்டும் என்பதை,

"பொருளொடு போகம் புணர்ந்த ஜூழிலும்
அருளுதல் சான்ற வருந்தவம் செய்ம்மின்"

என்றுரைக்கின்றது. தவநெறியில் முழுமையாக நிற்பது நமக்கு முடியாத ஒன்று. தவத்திற்கெல்லாம் தலைவனாக இருக்கும் இறைவனுக்கு மட்டுமே இயலக்கூடியது. ஆயினும் மனிதர்கள் தவம் பேண வேண்டும். மயக்கம் அறுத்தல், மனம், மொழி, மெய் அடக்குதல், விருப்பு வெறுப்பின்மை, உயிர்களுக்கிரங்கல் என்பன தவத்தின் பண்புகள். இதனை மேற்கொள்வது தவம் மேற்கொள்வது போன்றது என்பதை,

> "தவத்தின் மேலுறை தவத்திறை தனக்கல ரிதே
> மயக்கு நீங்குதல் மனமொழி யொடுமெய்யிற்செறிதல்
> உவத்தில் காய்தலை யொழுபல் வகையுயிர்க் கருணை
> நயத்து நீங்குதல் பொருட்டனை யனையது மறிநீ"

என்று உரைக்கின்றது. இல்லறத்தில் இருந்து கொண்டே தானமும் தவமும் செய்ய வேண்டும். அவ்வாறு தானமும் தவமும் செய்யாத வாழ்வு காட்டில் ஒளிர்கின்ற நிலவின் ஒளிபோலப் பயனற்றதாகும் என்பதை,

> "தானஞ் செய்திலைத் தவமு மன்னதே
> கானத் தோய்நில விற்கழி வெய்தின"

என்றுரைக்கின்றது. வீடு பெறுவதற்கு மட்டுமின்றி இந்த வாழ்வு சிறப்பதற்கும் தவம் இன்றியமையாததாகும். பழவினைகளுக்கேற்பவே ஒருவருடைய வாழ்வு அமைகிறது. பொருளும் போகமும் முற்பிறப்பில் செய்தவினைகளுக்கு ஏற்பவே வாய்க்கும். ஒரு பிறவியில் நற்றவம் புரியாதவர் அடுத்த பிறவியில் இன்பம் பெற விழைவது வீணேயாகும். இதனை உணர்ந்து பிறவியில் நல்லறங்கள் செய்ய வேண்டும். நிலம் இருந்து, ஏர் இருந்து, உழுது போட்டாலும் விதை இல்லை என்றால் விளைச்சல் இல்லை. ஒரு பிறவியில் மெய்த்தவம் புரியாதவர்க்கு அடுத்த பிறவியிலும் இன்பம் இல்லை என்பதை,

> "உய்த்தொன்றி யேர்நந் துழவுழு தாற்றவும்
> வித்தின்றிப் பைங்கூழ் விளைக்குந வல்லனொன்றும்
> மெய்த்தவ மில்லான் பொருளொடு போகங்கட
> கெய்த்துழத் தேதா விடர்ப்படு மாறே"

என்றுரைக்கின்றது.

**மெய்யுணர்வு**

இன்பமும் துன்பமும் மாறி மாறி வருவது வாழ்வின் இயல்பாகும். இவ்வின்பமும் துன்பமும் ஊழ்வினைக்கேற்ப வருகிறது. இதனை

உணராத மனிதன் இன்பம் தன்னால் வந்தது என்று பெருமிதம் கொள்கிறான். துன்பம் பிறரால் வந்ததென்று கலக்கம் அடைகின்றான். இவ்வாறு இன்பத்தில் மகிழ்வதும் துன்பத்தில் துவள்வதும் பேதமை. ஊழ்வினைத் தொடர்பால் வரும் துன்பத்தை விலக்கும் தகுதி இறைவனுக்கு மட்டுமே உண்டு. அந்த இறைவன் ஒருவனே. இந்த மெய்யுணர்வு மனிதனுக்கு வேண்டும் என்பதை,

"பருவந்து சாலப் பலர்கொலென் றெண்ணி
ஒருவந்த முள்ளந் துவத்த லொழிமின்
வெருவந்த துன்பம் விடுக்குந் திறலோன்
ஒருவ னுலகிற் குளனென்று மாறே"

என்றுரைக்கின்றது.

**நட்பின் சிறப்பு**

ஒருவன் வறுமையுற்று வாழ்வில் தாழ்வு பெறும் போது சுற்றமும் சொந்தமும் விலகிச் சென்று விடுகிறது. நிலைதாழ்ந்து தடுமாறுவோர்க்கு நட்பு ஒன்றே நல்ல துணையாக நிற்கிறது என்பதை,

"கெட்டே யிருவெந் நிலையென்று சார்ந்தக்கண்
நட்டவ ரல்லார் நனிமிகு பல்சுற்றம்
பெட்டது சொல்லிப் பெரிதகழ்ந் தாற்றவு
மெட்டவத் தோரிடத் தேகி நிற்பவே"

என்றுரைக்கின்றது.

**நல்லகுரு**

நன்னெறி உணர்ந்து நல்லறங்கள் செய்ய விரும்புபவர்கள் நல்ல குருவைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அவ்வாறு 'அறநெறி உணராதவர்களை ஆசிரியராகக் கொள்வது துன்பத்தையே தரும் என்பதையும் வளையாபதி எடுத்துரைக்கிறது.

**பொதுமகளிர் இயல்பு**

பொதுமகள் என்று கூறப்படும் கணிகையரொடு கொள்ளும் தொடர்பினை ஆடவர்கள் விட்டொழிக்க வளையாபதி வற்புறுத்துகின்றது.

கணிகையரால் தீமை உண்டாகுமே தவிர நன்மை உண்டாவதில்லை என்பதை உணர்த்தும் வகையில் தீக்கடைக்கோலைக் கணிகையர்க்கு ஒப்புமைப்படுத்துகின்றது. பொருள் இருக்கும்வரை முகம் மலர்ச்சி காட்டி பொருள் குறைந்த போது முகவாட்டம் காட்டும் கணிகையரைத் திங்கள் போன்றவர் என்று குறிப்பிடுகிறது. பொருள் இழந்தவனைக் கைவிட்டுப் புதியதாக ஒருவனைத் தேடும் கணிகையர், விலங்கு, குரங்கு, வண்டு போன்றவர்கள் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது.

"வீபொரு ளானை யகன்று பிறனுமோர்
மாபொரு ளான்பக்க மாண நயத்தலின்
மேய்புலம் புல்றை மற்றோர் புலம்புகு
மாவும் புரைப மலரன்ன கண்ணார்"

என்று விலங்கு போன்றோர் கணிகையர் என்பதைக் குறிப்பிடுகின்றது. இத்தகு கணிகையர் உறவொழித்து கற்புநெறி தவறாத மனைவியோடு இல்லறம் நடத்த வேண்டும் என்று வளையாபதி மொழிகிறது.

**முடிவுரை**

பெறுதற்கரிய உயர்பிறவி மானிடப்பிறவி. இப்பிறவியில் மனிதப் பண்பை வளர்த்து மாண்புறுவது மனிதனின் கடமை. கற்புநெறி ஆடவருக்கும் பெண்டிர்க்கும் பொது. கற்புநெறி பேணுவதால் பெண்களுக்கே மிகுந்த புகழ் உண்டாகும். பொருட்செல்வம் தேடுவதோடு மக்கட் செல்வமும் பெறுவதே இல்லத்திற்குச் சிறப்பு. இளமை, யாக்கை, பொருள் ஆகியன நிலையாமை உடையன. இவற்றைக் கொண்டு நிலைத்த புகழ் தேட வேண்டும்.

நாவடக்கம், பொய்யாமை, கொல்லாமை, களவு செய்யாமை போன்ற அறநெறி பேண வேண்டும். நல்ல குருவருள் பெற்று மெய்யுணர்வு பெற்று வாழ்வில் உயர்வுபெற வேண்டும். இவ்வாறு இம்மையும் மறுமையும் சிறக்க வழிகாட்டுவதாக வளையாபதிக் கருத்துக்கள் உள்ளன.

# புறமும் - மணிமேகலையும்

இ.ஜனம், விஜயமங்கலம், பெருந்துறை

**முன்னுரை**

காலத்தாலும், கதைத் தொடர்பாலும் இரட்டைக் காப்பியங்களாக விளங்குபவை, சிலப்பதிகாரமும், மணிமேகலையுமாகும். சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோவடிகள் சமணமதத்தைத் தழுவினாலும் பிறமதக் கருத்துக்களைத் தம்காப்பியத்தில் இடம் பெறச் செய்துள்ளார். ஆனால் மணிமேகலையை எழுதிய சீத்தலைச்சாத்தனார் பௌத்தமதக் கருத்துக்களையே வலியுறுத்திக் கூறியுள்ளார். இருப்பினும் மானிடர்க்குத் தேவையான அறக்கருத்துக்களை வலியுறுத்திக் கூறியுள்ளதே இதன் சிறப்பாகும். அதில் ஒன்றான பசிப்பிணியைப் பற்றி எழுதியுள்ள பாடல் வரிகள், புறநானூற்றுப் பாடல் வரிகளுடன் ஒப்புமை உடையதாகக் காணப்படுவதை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்.

**புறநானூற்றில் பசிப்பிணி**

சங்ககாலப் புலவர்கள் தங்களைப் பாதுகாத்த புரவலர்களின் புகழை மட்டும் பாடாமல் அவர்கள் ஆற்ற வேண்டிய அறப்பணிகளை அன்பு கட்டளையாகத் தம் பாடல் வழி எடுத்தியம்பியுள்ளனர். குடபுலவியனார் என்ற புலவர், தலையானங்கானத்துச் செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியனிடம், நீ நீடித்த புகழ் பெற வேண்டின், நீர் நிலைகளை அமைப்பாய், மக்களின் பசியைப் போக்கி உணவை அளித்து, அவர்களின் உயிரைப் பாதுகாப்பாய் என்று எடுத்துரைப்பதாகப் பாடியுள்ளார்.

“நீரின்றமையா யாக்கைக் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே
உண்டி முதற்றே யுணவின் பிண்டம்” (பா.எண்.18)

என்று குறிப்பிட்டுள்ளார்.

**மணிமேகலையில் பசிப் பிணி**

பசியை நீக்கும் அமுதசுரபியைக் கையிலேந்தி அறப்பணிச் செய்யும் அறச் செல்வியாக மணிமேகலையைப் படைத்துள்ளார் சாத்தனார். பசிப் பிணிக்கு மருந்து உணவாகும். இதனை,

"மக்கள் யாக்கை உணவின் பிண்டம்
இப்பெரு மந்திரம் இரும் பசி அறுக்கும்" (மந்.காதை – 90)

என்கிறார்.

பசியின் கொடுமையைத் தீவதிலகை என்ற பெண்வாயிலாக பாத்திரம் பெற்ற காதையில் கூறுகிறார்.

"குடிப்பிறப்பு அழிக்கும் விழுப்பம் கொல்லும்
பிடித்த கல்வி பெரும் புனை விடூஉம்
பசிப்பிணி என்னும் பாவி அது தீர்த்தோர்
இசைச்சொல் அளவைக்கு என்நா நிமிராது" (பா.கா. 76)

**இப்பசியை நீக்குவோர்**

"மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே" (பா.கா. 950

எனப் புறநானூற்றுப் பாடல் வரிகளை அங்ஙனமே இடம் பெறச் செய்துள்ளார் சீத்தலைச் சாத்தனார்.

**முடிவுரை**

பசியின் கொடுமையைத் தீர்த்தலே பொருள் பெற்றதன் பயன் என்பதனை,

"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி" (குறள் 226)

என்கிறார் வள்ளுவப் பெருந்தகை. எனவே மனிதனுக்கு எந்தத் துன்பம் நேர்ந்தாலும் பொறுத்துக் கொள்ள இயலும். ஆனால் பசியைப் பொறுத்துக் கொள்ள இயலாது. இதனையே,

"பசி வந்தால் பத்தும் பறக்கும்" – என்ற

பழமொழியும் எடுத்துரைக்கிறது. இதனையே புறமும், (மணி) மேகலையும் எடுத்தியம்பியுள்ளன.

# அறிவு வளர்ச்சியும் அறிவியல் தொழில் நுட்பமும்

முனைவர் கு. குழந்தைவேல் பன்னீர்செல்வம்

ஒரு நாட்டின் ஆதாரம், பலம் என்பது ராணுவ வலிமை மட்டுமின்றி, அந்த நாட்டின் மனித சக்தி (மனித ஆற்றல்) யின் அளவைப் பொருத்தது. கல்வியின் நோக்கம் அறிவுப் பெருக்கம். இக்கல்வியை வாழ்க்கைக்கான கல்வி, வாழ்க்கையின் மூலம் கல்வி, வாழ்க்கை முழுவதும் கல்வி என அனைவரும் தங்களை உயர்த்திக் கொள்ள வேண்டும். மனிதவள முன்னேற்றத்திற்கு உலகம் முழுவதும் உயர்கல்வி மிக முக்கியத் தூணாக உள்ளது. தொடர்ந்து கற்பதென்பது அனைத்துத் துறையினருக்கும் முக்கியமானது.

**அறிவுப் பெருக்க கட்டமைப்பு**

உயர்கல்வி மனித வளர்ச்சிக்குத் தேவையான துறைகளில் அறிவுப் பெருக்கத்தையும் அடிப்படைக் கட்டமைப்பையும் உருவாக்குகிறது. கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களும் தங்களுடைய கல்வித்திட்டம் மற்றும் ஆராய்ச்சி விரிவாக்கத் திட்டங்களின் மூலம் ஒரு சமுதாயத்தை வளர்ச்சிப் பாதையை நோக்கி விரிவுப்படுத்துகின்றன. ஓர் உயர்ந்த நாடு என்ற முறையில் நமக்கு நிறைய சமூகவிஞ்ஞானிகளும் மொழி வல்லுநர்களும் தேவைப்படுகின்றனர். இந்தத் துறைகளுக்கான இளைஞர்களை இனம் கண்டு வளர்க்க வேண்டிய பொறுப்பு உயர்கல்வி நிறுவனங்களுக்கு உண்டு. உயர்கல்வி நிலையங்கள் மனிதனின் அனைத்து விதமான வளர்ச்சிகளுக்கும் துணை செய்கின்றன. 107 கோடி மக்கள் தொகை கொண்ட இந்தியாவில் 7% மாணவர்கள் தான் உயர்கல்வியைப் பெறுகின்றனர்.

ஒரு நாட்டின் வளர்ச்சிக்குத் தொழில் நுட்பத் துறை முக்கியப் பங்கு வகிக்கிறது. 5 ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த நமது இந்தியாவில் மனித வளமும் அறிவுத் திறனும் ஏராளம். இதனை நாட்டின் வளர்ச்சிக்குப் பயன்படுத்த வேண்டியது இன்றையத் தேவை. தொழில்நுட்பமும் உலகமயமாக்கலும் நம்முடைய வாழ்க்கையையும், சமுதாயத்தையும்

வெகுவாக மாற்றிவிட்டன. தரமான மனித வளத்தை உருவாக்க வேண்டுமெனில் கல்வி நிறுவனங்களில் தகவல் தொழில்நுட்ப அறிவைத் தெளிவுபட ஆசிரியர்களுக்கு அளிக்க வேண்டும். தற்போதைய தொழில்நுட்ப கல்லூரிகளிலிருந்து உயர்கல்வி படித்து வெளிவரும் மாணவர்கள் தேவைக்கு ஏற்றபடி தகுதியுடையவர்களாக இருக்கிறார்கள். மனிதவளத்தைச் சார்ந்திருக்கும் தொழில்நிறுவனங்கள் தங்களது லாபத்தை மட்டுமே கணக்கிட்டுவிட்டு, கல்வி நிறுவனங்களுக்கு முக்கியத்துவம் அளிக்காததுதான் இத்தகைய வளர்ச்சி பெற்றாலும் தொழில் நிறுவனங்களுக்கும் கல்வி நிறுவனங்களுக்கும் உள்ள பெரிய இடைவெளியாகக் கூறப்படுகிறது.

**அறிவு வாயில்**

உலகத்தரம் வாய்ந்த ஹார்வேர்ட் பல்கலைக்கழகம் மேற்கொண்ட ஆய்வின்படி தகவல் துறையில் இந்தியாவில் தமிழகம் முதலிடம் வகிக்கிறது. மேலும் தென்கிழக்கு ஆசியாவின் நுழைவு வாயிலாகத் தமிழகம் உள்ளது. 2010ல் தகவல் தொழில்நுட்பத்துறையில் நாட்டில் முதல்தரமாக சென்னை மாறும் என்று நாஸ்காம் அமைப்பு கூறுகிறது. தரமான கல்வி, மனித வளம் மற்றும் உள்கட்டமைப்பு வசதி காரணமாகத் தகவல் தொழில்நுட்பத் துறையில் தமிழகம் முன்னிலையிலுள்ளது. 2001ம் ஆண்டுக்கு முன் தகவல் தொழில்நுட்பத்துறை சார்ந்த பொருள்கள் ஏற்றுமதி 2 ஆயிரம் கோடிக்கும் சற்று குறைவாகவே இருந்தது. ஆனால் 2003-2004ல் 8 ஆயிரம் கோடியாகவும், 2004-2005ல் 10 ஆயிரம் கோடியாகவும் உயர்ந்தது. மென்பொருள் மற்றும் அதனைச் சார்ந்த பொருள்கள் ஏற்றுமதியில் உலக அளவில் நமது நாடு முதலிடத்துள்ளது. 2005-2006ல் இத்துறையில் சுமார் 76/000 கோடிக்கு ஏற்றுமதி செய்யப்படும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இது 2010ல் 2 லட்சத்து 25 ஆயிரம் கோடியாக உயர வாய்ப்புள்ளது. எனவே நமது இளைஞர்களுக்கு இப்போது தரமான கல்வி தேவை.

**தமிழகமும் தொழில்நுட்பமும்**

சிறப்புப் பொருளாதார மண்டலத் திட்டத்தின் கீழ் ஒரு சில துறைகளுக்கு வரிச்சலுகை வழங்கப்படுவது போல கல்வித்துறைக்கும் சலுகை அளிக்க வேண்டும். நாடு முழுவதும் இச்சலுகை வழங்க முடியாத பட்சத்தில் 2ம் தர வளர்ச்சி அடைந்த நகரங்களைத் தேர்வு செய்து இத்திட்டத்தைச் செயல்படுத்தலாம். தனியார் நிறுவனங்களின்

ஒத்துழைப்புடன் பள்ளிகளில் மாநில அரசு அறிமுகப்படுத்திய திட்டங்கள் வெற்றி பெற்றதால் 60 கலைக்கல்லூரிகள் 11 மருத்துவக் கல்லூரிகள் மற்றும் 5 சட்டக் கல்லூரிகளும் இத்திட்டத்தால் விரிவுப்படுத்தப்பட்டுள்ளன. கணினித் துறையில் முன்னிலையிலுள்ள மைக்ரோசாப்ட் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டு மைக்ரோசாப்ட் அகாதமி உதவியுடன் ஒரு லட்சம் பள்ளி ஆசிரியர்களுக்குத் தரமான கம்யூட்டர் கல்வி அளிக்கப்படுகிறது. தகவல் தொழில்நுட்பத்துறையில் ஏற்பட்ட வளர்ச்சியைக் கண்டு உலக நாடுகளே வியந்து நிற்கின்றன. நம்மைப் பின்பற்றக்கூடிய அளவுக்குப் பிறநாடுகளுக்கு முன்மாதிரியாக உள்ளோம். தகவல் தொழில்நுட்பத்துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியால் இத்துறையில் அடுத்த 4 ஆண்டுகளில் அதாவது 2010ல் சுமார் 1,50,000 பொறியாளர்கள் தேவைப்படுவார்கள் என்று தேசிய மென்பொருள் மற்றும் பழுது நீக்கும் சங்கம் கூறுகிறது.

ஒருங்கிணைந்த தொழில்நுட்பத்தைக் கையாண்டால் 2020ல் இந்தியா வளர்ந்த நாடாக உருவாகிவிடும். ஒரு நாடு முன்னேற வேண்டுமெனில் வேளாண்மைத் துறை, கல்வி வளர்ச்சி, சுகாதார வளர்ச்சி, தகவல் தொழில் நுட்ப வளர்ச்சி, உள் கட்டமைப்பு என்ற இந்த 5 ஆரங்களைக் கொண்டிருக்க வேண்டும். இந்த 5 ஆரங்களுக்குத் துணை செய்ய,

1. மாற்றுச் சிந்தனை (Lateral Thinking)
2. தயார் நிலை (Preparation)
3. எண்ணங்களை அடைகாத்தல் (Inculpation)
4. ஒளிர்தல் (Illumination)
5. மெய்ப்பித்தல் (Proof by Experimental Verification)

என்ற புதிய சிந்தனைகளைத்தான் இலக்கை அடையச் செய்யும் அறிவாற்றலுக்கான மூலாதாரங்களை வலிமைப்படுத்த தேசிய அளவில் அறிவுவள கமிஷன் அமைக்கப்பட்டுள்ளது. உயர்கல்விக்கான புதிய கொள்கைகளை வகுப்பது. உற்பத்தித் துறையில் போட்டியைச் சமாளிக்க அறிவாற்றலைப் பெருக்குவது ஆகியன அறிவு வள கமிஷனுக்கான செயல்திட்டமாகும்.

சர்வதேச அளவுக்குப் போட்டியிடக்கூடிய தொழில்நுட்பத்தை நாம் பெற்றுள்ளோம். இதனைத் தொடர்ந்து தக்க வைத்துக் கொள்வதோடு நாளை ஏற்படப்போகும் மாற்றங்களுக்கு ஏற்ற தொழில்நுட்பத் திட்டத்தைத் தொலை நோக்குடன் அணுகிட வேண்டும்.

**************

# தஞ்சை வரலாற்றில் இரண்டாம் சரபோஜி மன்னர்

முனைவர் பு. வேம்பரசி

தஞ்சையை ஆட்சி செய்த மராத்திய மன்னர்களில் மிகச் சிறப்பு பெற்றவர் இரண்டாம் சரபோஜி. இவர் கி.பி. 1798 முதல் கி.பி. 1832 வரை ஆட்சி செய்தவர். போன்ஸ்லே வம்சத்தைச் சேர்ந்தவர். 24-09-1777 இல் மாவீரன் சத்திரபதி சிவாஜியின் சதாரா அரண்மனையில் ஷாஜிராஜாவின் மகனாகப் பிறந்தார். 22-01-1787 இல் பதினோராவது வயதில் தஞ்சை மராத்திய மன்னர் இரண்டாம் துளஜாவால் தத்து எடுக்கப்பெற்று தஞ்சைக்கு அழைத்துவரப்பட்டார். இச்செய்தியை 26-01-1787 இல் சென்னை ஆளுநருக்குக் கடிதம் மூலம் மன்னர் துளஜா தெரிவித்துள்ளார். மன்னரின் ஒன்றுப்பட்ட சகோதரர் அமரசிங் பாதுகாவலராக நியமிக்கப்பட்டார். துளஜா மன்னர் 31-01-1787 இல் இறந்தார்.

அமரசிங்இன் பதவி ஆசையினாலும் கிழக்கிந்தியக் கம்பெனியாரின் சூழ்ச்சியாலும் அரசவையில் சிலர் செய்த சதியாலும் அமர்சிங் 06-08-1788 இல் தஞ்சை மன்னரானார். பதவி மோகம் கொண்ட அமர்சிங் சரபோஜியை தமக்கு போட்டியாக நினைத்து துன்புறுத்தியதால் ஸ்வார்ட்ஸ் பாதிரியார் முயற்சியால் 10-01-1793ல் சரபோஜி சென்னை சைதாபேட்டையில் தங்கவைக்கப்பட்டார். சென்னையில் உள்ள செயின்ட் ஜார்ஜ் பள்ளிக்கூடத்தில் சரபோஜி கல்வி கற்றார். இந்திய மொழிகளைத் தாதாராவ் போன்ற அறிஞர்களிடமும் மேலை நாட்டு மொழிகளான ஆங்கிலம், பிரஞ்சு, ஜெர்மன், டானிஷ், டச்சு, கிரேக்கியம், லத்தீன் போன்றவற்றை ஸ்வாரட்ஸ், ராம், ஜெரிக் போன்ற அறிஞர்களிடமும் கற்று பன்மொழிப்பண்டிதராகவும், சிறந்த கல்விமானாகவும் திகழ்ந்தார்.

சரபோஜி, சரபோஜியின் தாய்மார்கள் (துளஜாவர் ராணிகள்) மற்றும் ஸ்வார்ட்ஸ் பாதிரியார் ஆகியவர்களின் விடா முயற்சியால் சரபோஜிக்கு இழைக்கப்பட்ட அநீதியை ஆங்கில அரசு உணர்ந்தது தஞ்சை அரியணைக்குரியவர் சரபோஜிதான் என்ற விவரத்தைக் கம்பெனியின் நிர்வாகக் குழுவிற்கு கவர்னர் ஜெனரல் சர் எட்வர்ட் மோரிஸ்டன் செய்த பரிந்துரையை ஏற்று, நிர்வாகக்குழு கவர்னர் ஜெனரலைத் தஞ்சை அரியணையிலிருந்து அமரசிங்கை நீக்கிவிட்டு சரபோஜிக்கு அரியணை வழங்குமாறு உத்தரவிட்டது. இதன்படி அமரசிங் பதவியிறக்கப்பட்டு 29-6-1798இல் சரபோஜி தஞ்சையில் அரியணை ஏறினார்.

ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனியும் மராத்திய மன்னர்களும் பல்வேறு காலகட்டங்களில் செய்து கொண்ட பல்வேறு உடன்படிக்கைகளினால் தஞ்சை அரசியலில் பெரும் குழப்பநிலை ஏற்பட்டது. நிர்வாகத்தில் ஏற்பட்ட இந்த ஒழுங்கற்ற நிலையை மாற்றியமைக்க விரும்பிய சரபோஜி ஆங்கில அரசு நிறைவேற்றிய 1799ஆம் ஆண்டு உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டு 25-10-1799 இல் இவ்வொப்பந்தத்தில் கையொப்பமிட்டார்.

இவ்வொப்பந்தத்தின்படி தஞ்சை நகரமும் வல்லமும் மட்டும் சரபோஜியின் ஆளுமைக்கு உட்பட்டதாயிருந்தது எஞ்சிய பகுதிகள் அனைத்தும் ஆங்கிலேயர் வசமாயிருந்தது அவர்களே வரிவசூலிக்கும் உரிமையும் பெற்றனர். சரபோஜிக்கு 1 இலட்சம் வராகனுடன் (3 இலட்சம் கம்பெனி ரூபாய்) தஞ்சை அரசின் மொத்த வசூலில் 1/5 பாகமும் கொடுக்கப்பட்டது. 1/5 பாகம் என்பது அமர்சிங்கிற்குக் கொடுக்கும் உதவித்தொகை, வசூல் செய்வதறிகுரிய செலவுகள் போக நிகரலாபத்தில் 1/5 பாகமாகும்.

**சரபோஜியும் ஸ்வார்ட்ஸ் பாதிரியாரும்**

சரபோஜி கல்வி போதிக்கும் பொறுப்பினை ஏற்றார். ஸ்வார்ட்ஸ் பாதிரியார், சரபோஜி அரசுரிமை பெறுவதற்குப் பெரிதும் காரணமாகத் திகழ்ந்தவர் ஸ்வார்ட்ஸ் 28-6-1998ல் சரபோஜி அரியணை ஏறுவதற்கு முன்னரே 13-2-1798ல் மறைந்தார்.

தம் குரு ஸ்வார்ட்ஸ் இறந்தபோது சரபோஜி ஓர் இரங்கற் பாவை மிக உருக்கமாக எழுதினார். அந்த இரங்கற் பாடலே இந்தியர் ஒருவர் எழுதிய முதல் ஆங்கிலப் பாடலாகும். இப்பாடல் மகர்நோன்புச் சாவடி தூய பேதுரு தேவாலயத்தில் நல்லடக்கம் செய்யப்பட்ட ஸ்வார்ட்ஸ் கல்லறையில் பொறிக்கப்பட்டுள்ளது.

ஸ்வார்ட்ஸ் மரணப் படுக்கையிலிருக்கும் போது சரபோஜியும், ஜெரிக் பாதிரியாரும் சென்று பார்க்கும் தோற்றத்தில் வெண் பளிங்குச் சிற்பம் ஒன்று சிவகங்கை தோட்டத்திலுள்ள ஸ்வார்ட்ஸ் தேவாலயத்தில் சரபோஜி மன்னரால் அப்போதைய புகழ்பெற்ற அமெரிக்கச் சிற்பியான ஜான் பிளாக்ஸ்மென் மூலம் வடிக்கப்பட்டு 1811இல் வைக்கப்பட்டது.

தஞ்சைக் கலைக்கூடத்தில் இருக்கின்ற இரண்டாம் சரபோஜி மன்னரின் முழு உருவச் சலவைக்கல் சிற்பத்தையும் பிளாக்ஸ்மனே செய்தார்.

### சரபோஜியும், வேதநாயக சாஸ்திரியாரும்

ஸ்வார்ட்ஸ் சரபோஜிக்கும், வேதநாயகத்துக்கும் ஒன்றாகவே கல்வி போதித்ததால் இருவரும் கடைசி வரை நட்புடன் பழகினர். சரபோஜி மன்னரின் அவைக்களப் புலவராகச் சில காலம் திகழ்ந்த சாஸ்திரியார் மன்னருக்கு இணையாகத் தர்பாரில் அமரும் வாய்ப்பினைப் பெற்றார்.

மன்னர் சரபோஜி 1803ல் மராத்திய மன்னர்களின் வரலாற்றை மராத்தியில் எழுதச் செய்து மராத்தியப்படியினைத் தஞ்சை பெரியகோவில் தெற்குச் சுவரில் பொறிக்கச் செய்தார். இந்த நகல்களை வரலாற்று ஆவணத் தொகுப்பாளர் மெக்கன்சிக்கு அளித்தவர் சாஸ்திரியரேயாவார். இவ்வரலாற்றினைக் காவியமாக்கும் முயற்சியினை மேற்கொண்டு 1811 இல் அவ்வரலாற்றில் சில பாடல்களைப் பாடி சரபோஜி மன்னரிடம் விலை உயர்ந்த சால்வையைப் பரிசாகப் பெற்றார் சாஸ்திரியார். நோவாவின் கப்பல் என்ற நூலை இயற்றி மன்னர் அவையில் அரங்கேற்றி மன்னரிடமிருந்து 100 வராகன் பரிசினைப் பெற்றார். இடையில் சிலகாலம் இருவருக்கும் நல்லுறவு சீர்குலைந்தாலும் மன்னர் சரபோஜி 1832இல் இறந்த செய்தியை அறிந்து,

> *"அன்னையும் பிதாவே மன்னவா நீயோ*
> *அதிகமார் என்பதை அறியேன்".*

என்றும் உள்ளத்தை உருக்கும் இரங்கற்பாவைப் பாடித் தன் அன்பையும் நட்பையும் வெளிப்படுத்தினார் சாஸ்திரியார்.

### சரபோஜி மன்னரும் சிவக்கொழுந்து தேசிகரும்

கும்பகோணத்திற்கு அருகிலுள்ள கோடீச்சரம் என்னும் கொட்டையூரில் பிறந்த சிவக்கொழுந்து தேசிகர் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழிலும் சிறந்து விளங்கினார். இவருடைய புலமையை அறிந்த இரண்டாம். சரபோஜி இவரை அழைத்து வந்து தம் அரசவைத் தலைமைப் புலவராக்கினார்.

மன்னர் வேண்டுகோளுக்கிணங்க பல தமிழ் நூல் ஏட்டுப் பிரதிகளை விலை கொடுத்து வாங்கித் தொகுப்பித்தார். 1826இல் சரபேந்திர வைத்திய முறைகள், சரபேந்திரன் சன்னிரோக சிகிச்சைகள், சரபேந்திர வைத்தியம் போன்ற சித்த மருத்துவ நூல்களைச் செய்யுள் வடிவில் எளிய நடையில் எழுதியுள்ளார்.

சரபோஜி மன்னனைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு இவரால் பாடப்பெற்ற சரபேந்திர பூபாலக் குறவஞ்சியில், அதன் பல்வேறு

இடங்களில் தம்மை ஆதரித்துப் போற்றிய மன்னரின் பெருமைகளைப் புகழ்ந்துள்ளார்.

சென்னை ஆங்கில அரசின் வேண்டுகோள்படி சென்னையில் தொடங்கப்பட்ட ஒரு கல்லூரிக்குத் தமிழ்த்துறைத் தலைவராகச் சிவக்கொழுந்து தேசிகரை மன்னர் அனுப்பி வைத்தார்.

**இரண்டாம் சரபோஜியும் திருவிதாங்கூர் மகாராஜாவும்**

சரபோஜியைப் போல் சிறந்த கல்விமானாகவும், பன்மொழி வித்தகராகவும் திகழ்ந்த திருவிதாங்கூர் மகாராஜா ஸ்ரீசுவாதித் திருநாள் மகாராஜாவோடு சரபோஜி இதயபூர்வமான நட்புக்கொண்டதோடு அறிஞர்களையும், இசை மேதைகளையும் ஒருவருக்கொருவர் பரிமாற்றம் செய்து கொண்டனர். திருவிதாங்கூர் அரசர் தாமியற்றிய புகழ்பெற்ற புத்தகங்களை உயர்தர வெல்வெட்டினாலும், தங்கவேலைப் பாடுகளினாலும் அலங்கரித்து அன்பளிப்பாகச் சரபோஜி மன்னருக்கு அனுப்பியுள்ளார்.

**சரபோஜியும் ஆங்கில அதிகாரிகளும்**

கொழும்பு கவர்னர் மேஜர் ஜெனரல் ஸ்ரீஹட்சன்லோ என்பவரும் அவருடன் மூன்று அரசு அதிகாரிகளும் தஞ்சை வந்து சரபோஜியைச் சந்தித்தனர். சரபோஜி 14 குண்டுகள் வெடிக்கச் செய்து மரியாதை செய்து அவரை வரவேற்று மகிழ்ச்சியுடன் பயணத்திற்குத் தேவையான எல்லா ஏற்பாடுகளையும் செய்து கொடுக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

சரபோஜியின் ஆட்சிக்காலத்தில் 02-03-1826இல் கவர்னர் ஜெனரல் வாரன் ஹேஸ்டிங் ஸின் (1774-1785) படம் தஞ்சைக்குக் கொண்டு வரப்பட்ட போது கவர்னர் ஜெனரலை வரவேற்பதைப் போல் அவர் படத்திற்கும் 21 குண்டுகள் போட்டு மரியாதை செய்து ஆங்கிலேய உயர் அதிகாரிகள் மீது தமக்கிருந்த மரியாதையையும் விசுவாசத்தையும் வெளிப்படுத்தியுள்ளார் சரபோஜி.

கவர்னர் ஜெனரல் காரன்வாலிஸ் பிரபு (1786-1793) தஞ்சை வந்து அமர்சிங்குக்குச் சாதகமாகத் தீர்ப்பு கூறிய 12 பண்டிதர்களை மீண்டும் விசாரிக்கச் செய்தார் என்ற மோசடி ஆவணக் குறிப்பு மூலம் சரபோஜியைத் தத்து எடுத்துக் கொண்ட செய்தியை மீண்டும் ஆய்வு செய்யுமாறு பணித்தார் என்பது தெளிவாகிறது.

லார்டு ஹோபார்டு 07-09-1794 முதல் 21-02-1798 வரை சென்னை கவர்னராக இருந்தவர். சென்னையில் சரபோஜி தங்கியிருந்தபோது அவர் மீது மிகுந்த அன்பு கொண்டு தாம் வேட்டைக்குச் செல்லும் போது சரபோஜியையும் உடன் அழைத்துச் சென்றார் என்று ஓராவணச் செய்தி மூலம் அறியப்படுகிறது.

சென்னை கவர்னராக இருந்த சர் தாமஸ் மன்றோ (1820-1826) 06-08-1826இல் தஞ்சைக்கு வந்த போது 19 குண்டுகள் வெடிக்கச் செய்து சரபோஜி தம் மகன் மற்றும் மூன்று மாப்பிள்ளைகள் மற்றும் உயர் அலுவலர்களுடன் சென்று சந்தித்து நலம் விசாரித்ததுடன் விலை உயர்ந்த பரிசுப் பொருட்களையும் வழங்கியுள்ளார்.

தஞ்சையில் ரெஸிடெண்டுகளாக பணியாற்றிய பென்ஜமின் டூரின், வில்லியம் பிளாக்பர்ன், ஜான்கைபைகப், ஜே. பிளாக்பர்ன் போன்றவர்கள் சரபோஜியுடன் நட்புடன் பழகினர்.

சரபோஜியின் ஆங்கிலப் புலமை, கல்வியறிவு, நூலகப்பணிகள், சிறந்த குணநலன்கள், அழகிய தோற்றம் ஆகியவற்றைத் தஞ்சை அரசவைக்கு வருகைபுரிந்த மேனாட்டு அறிஞர்களான பிஷப் ஹிபர், வாலண்ஷியா பிரபு, டாக்டர் புக்னன் மற்றும் டாக்டர் மிடில்டன் முதலானோர் போற்றிச் சென்றுள்ளனர்.

**இலண்டன் இராயல் ஏசியாடிக் சொசைட்டியின் கௌரவ உறுப்பினராதல்**

சரபோஜியின் நற்செயல்களையும், கல்வியறிவையும், ஆங்கிலப் புலமையையும் பாராட்டி 1827இல் இலண்டன் இராயல் ஏசியாடிக் சொசைட்டியின் கௌரவ உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டுக் கௌரவிக்கப்பட்டார். உலகளவில் கௌரவ உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட நான்கு அரசர்களில் தஞ்சை சரபோஜியும் ஒருவர் என்பதும், வெளிநாட்டு அறிஞர்களுக்கு இணையாக உயரிய இடத்தைப் பெறும் வாய்ப்பையும் பெற்றார் என்பதும் பெருமையுடன் கூறிய செயலாகும்.

இராயல் ஏசியாடிக் சொசைட்டியின் கிளைகள் கல்கத்தா, சென்னை, மற்றும் பம்பாயில் நிறுவப்பட்ட போது அதன் சென்னைக் கிளையின் உறுப்பினராக 31-01-1830இல் சரபோஜி சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

**அந்நிய நாட்டில் அறக்கட்டளை ஏற்படுத்துதல்**

சரபோஜி மன்னரால் இலண்டனில் நிறுவப்பட்ட Oriental Translation Fund என்ற தர்ம ஸ்தாபனத்தின் நிதி உதவியால் அரபுப் பயணியான இபின் பதுதாவின் பயணக் குறிப்புகள் மொழி பெயர்க்கப்பட்டு பிரசுரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

**சரபோஜி சிறந்த ஆட்சியாளர்**

சரபோஜி ஆட்சியைத் திறமையுடன் கவனிக்க அரசின் துறைகளான 18 (கார்) கானாக்களையும் அரண்மனைத் தொடர்புடைய துறைகளான 12 மகால்களையும் ஏற்படுத்தியிருந்தார்.

தற்போதைய நகரசபை ஒத்திருந்த நகர பரீஸ்கார சபா என்ற ஓர் அமைப்பைக் கோட்டைக்குள் நகரத்தின் நிர்வாகத்தைக் கவனிக்க அமைத்திருந்தார்.

இவர் பொதுமக்களின் வசதிக்காகக் கோட்டைக்குக் குடிநீர் வசதி செய்யும் பொருட்டு முத்துசுவாமிபிள்ளை போன்றோரின் உழைப்பைக் கொண்டு சேவப்ப நாயக்கன் ஏரியிலிருந்து சிவகங்கை குளத்துக்கும் கோட்டைக்குள் பல குளங்களுக்கும் ஒரு விரிவான குழாய் இணைப்பு முறையை உருவாக்கினார். இது இவருடைய ஜலசூத்திரம் என்ற நூலில்-வரைபடங்களுடன் விரவாகக் கூறப்பட்டுள்ளது. கோட்டைக்குள் சிறப்பான முறையில் கழிவு நீரை வெளியேற்றும் கால்வாய்களை நாகலிங்க சேர்வை போன்றோரைக் கொண்டு அமைத்திருந்தார். இந்த முறையில் எவ்வளவு பலத்த மழை பெய்தாலும் கோட்டைக்குள்ளும் நகரத் தெருக்களிலும் நீர் தேங்காது அகழிக்குச் சென்று விடும்.

இரண்டாம் சரபோஜி அரியணை ஏறி ஆட்சி செய்த காலத்தில் சிறந்த முறையில் நீதி வழங்க முத்திரித சபை, தரும சபை, நியாய சபை, நியாயதீச சபை ஆகிய நால்வகை நீதி மன்றங்களை நிறுவியுள்ளார். இவற்றைத் தவிர ஐந்தாவது நீதிமன்றமாகக் கார்பார் பிரசங்க சபா என்ற நீதிமன்றம் 18 கானாக்கள், 12 மகால்கள் மற்றும் அரண்மனை ஆகியவற்றின் அலுவலர்கள் தொடர்புடைய வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்குவதற்கு ஏற்படுத்தப்பட்டது. ஆறாவது நீதிமன்றம், நியாய நிஷி மன்றம் என்பது முக்கிய மேல் முறையீட்டு நீதிமன்றமாகும். இதில்

மன்னரே இறுதித் தீர்ப்பு வழங்குவார். இது சரபோஜி அரசில் இருந்த உச்சநீதி மன்றமாகும். சரபோஜி மனிதாபிமானத்துடன் தண்டனை வழங்கினார்.

**இரண்டாம் சரபோஜியின் சமயப் பணிகள்**

சிறந்த சிவபக்தராக, சைவ சமயப் பற்றுள்ளவராகத் திகழ்ந்தாலும், இந்து சமயம் மட்டுமல்லாமல் இஸ்லாம், கிறிஸ்துவம் உள்ளிட்ட அனைத்துச் சமயங்களுக்கும் மன்னர் ஆதரவும், சிறப்பும் அளித்துச் சமய சமரசம் கண்டவராக விளங்கி வருகின்றார்.

நவீனப் போக்குவரத்து வசதி இல்லாத காலத்தே பல்லாயிரக்கணக்கான மைல்கள் தொலைவிலுள்ள காசிக்கு உறவினர்கள், அதிகாரிகள், அறிஞர்கள், கலைஞர்கள், படைவீரர்கள், பிராமணர்கள் உள்ளிட்ட 3000 பேரை அழைத்துச் சென்று ஏறக்குறைய இரு ஆண்டுகள் (1820-1822) காசி-இராமேஸ்வரப் பயணத்தை நிறைவுடனும், வெற்றியுடனும் முடித்துள்ளார் சரபோஜி. இது அவருக்கு சமயத்திலிருந்த நாட்டத்தைப் பாங்குற விளக்குகிறது.

மணிகர்ணிகேசுவரர் கோயில், சந்தர மௌளீசுவரர் கோயில், விட்டோபா கோயில் போன்ற பல புதிய கோயில்களை எடுத்தும் தஞ்சை பெரிய கோவில் உட்பட ஏராளமான கோயில்களுக்குத் திருப்பணிகள் செய்தும், திருக்கோயில்களுக்கு ஏராளமான கொடைகள் வழங்கியும், சேதுப்பயணம் செல்லும் பயணிகளின் களைப்பையும், பசியையும் போக்கச் சங்கிலித் தொடர் போல் பல சத்திரங்களை நிறுவியும் இவர் ஆற்றிய சமயப் பணி தஞ்சை வரலாற்றில் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

அனைத்துச் சமயங்களையும் ஆதரித்து சமய சமரசம் கண்டவர் சரபோஜி. தஞ்சை அரண்மனையில் இந்து பண்டிகைகளோடு இஸ்லாமிய மற்றும் கிறித்துவ பண்டிகைகளைக் கொண்டாடியும், அவர்களுக்குத் தாராளமாக அன்பளிப்பு நிலக்கொடைகள் மற்றும் மிஷனரி பள்ளிகளுக்கு நிதி உதவி அளித்தும், நிலக்கொடைகள் மற்றும் உழுப்பைகள் வழங்கியும், கிறித்துவர்களை மரியாதையுடன் நடத்தியும், இஸ்லாமிய புனித தலமான நாகூர் தர்காவிற்குத் தங்கப்பூ வழங்கியும், அங்கு ஆண்டு தோறும்

நடைபெறும். கந்தூரி விழாவிற்கு பெனராஸ் பட்டினால் தங்க வேலைபாடுடைய சால்வை வழங்கியும் முத்துப்பேட்டை ஜாம்புவானோடை ஷேக் தாவீது ஒலியுல்லா தர்காவிற்குச் சென்று வழிபாடு செய்தும், தர்காவைச் சுற்றியுள்ள 6 வேலி நிலத்தைக் கொடையாக வழங்கியும் சமயப் பொறையுடைமைக்கும், மதநல்லிணக்கத்திற்கும் சிறந்த முன்னுதாரணமாகத் திகழ்ந்தார் இரண்டாம் சரபோஜி மன்னர்.

**மன்னரின் கலைப்பணிகள்**

நெற்களஞ்சியத்தோடு, கலைகளஞ்சியமாகவும் திகழ்ந்த தஞ்சையில் கலைகளின் காவலன் எனப் போற்றப் பெறும் இரண்டாம் சரபோஜி நுண்கலைகளின் வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகள் போற்றத்தக்கதாகும்.

இரண்டாம் சரபோஜி மன்னர் ஏராளமானோர் புடைசூழ காசிப்பயணம் சென்ற காட்சி துணி ஓவியமாக வரையப்பட்டு தற்போது இலண்டன் இந்திய அலுவலக நூலகத்தில் வைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு தொல்லியல் துறையின் இயக்குனராகயிருந்த இரா.நாகசாமி இலண்டனில் உள்ள தென்கென்சிங்டனில் உள்ள பிரிட்டிஷ் அருங்காட்சியகம், விக்டோரியா மற்றும் ஆல்பர்ட் அருங்காட்சியங்களுக்குச் சென்று அங்குள்ள அரிய கலைப் பொருட்களைப் பார்வையிட்ட போது அங்கு இரண்டாம் சரபோஜி காலத்தைச் சேர்ந்த 1800இல் வரையப்பட்ட 60 ஓவியங்கள் அங்கு வைத்துப் பராமரிக்கப்பட்டு வருகிறது என்ற தகவலைப் பதிவு செய்கின்றார்.

சரபோஜியின் காசிப் பயணத்தின் போது காசியிலுள்ள கங்கைக்கரையில் உள்ள 64 புனித படித்துறைகளிலும் மன்னரும், அவர் குழுக்களும் நீராடினர். அந்த 64 படித்துறைகளைத் தொடர் ஓவியமாகக் காட்டும் வண்ண நூல் ஒன்று சரசுவதிமகால் நூலக அருட்காட்சியகத்தில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

மன்னர் தம் வட இந்தியப் பயணத்தின் போது பாட்னா, மூர்சிதாபாத், காசி போன்ற வட இந்தியப் பகுதிகளில் சிறந்து விளங்கிய

மைக்கா ஓவியக் கலைஞர்கள் மற்றும் தஞ்சையிலும் திருச்சியிலும் மைக்கா ஓவியங்கள் வளர்ச்சி பெறுவதற்கு உறுதுணையாயிருந்தார்.

சரபோஜி மன்னர் காலம் சங்கீத மும்மூர்த்திகளான தியாகராஜர், சியாமா சாஸ்திரிகள், முத்துசாமி தீட்சிதர்கள் வாழ்ந்து இசை தொண்டு புரிந்த பெருமை பெற்ற காலம். இசையின் மீது ஈடுபாடு கொண்ட சரபோஜி மேல்நாட்டு இசைக்கருவிகள் உட்பட ஏராளமான இசைக் கருவிகளை விலைக்கு வாங்கியதோடு இசையில் சிறந்து விளங்கியவர்களைக் கொண்ட சங்கீத வித்யாதிக் பிரிவு ஒன்றையும் ஏற்படுத்தி அவர்களுக்குத் திங்கள் தோறும் சம்பளம் வழங்கி இசைக்கலை வளர்ச்சிக்குப் பேராதரவு நல்கியுள்ளார்.

மேல்நாட்டு சங்கீத வாத்தியங்களை நம் நாட்டு சங்கீத நிபுணர்களைக் கொண்டு கையாளச் செய்து அதிலிருந்து உண்டான மேல்நாட்டு விறுவிறுப்பும் நம் நாட்டுக் குழைவும் சேர்ந்த தஞ்சாவூர் பாண்டு என்ற ஒரு புதுக்கலையை உருவாக்கினார். இன்று முக்கிய விழாக்கள், முக்கியத் தலைவர்களின் வரவேற்பு போன்ற நிகழ்ச்சிகளில் இவர்கள் இசைத்துக் கொண்டு முன்செல்வர்.

சரபோஜி மன்னரின் அரண்மனை வித்துவான்களான தஞ்சை நால்வரான, பொன்னையா, சின்னையா, சிவானந்தம், வடிவேலு, மற்றும் நாட்டியக்கலை பெண்களையும் ஆதரித்தும் நாட்டியக்கலையைப் போற்றினார்.

தஞ்சை கைவினைப் பொருள்களில் தனிச்சிறப்புப் பெற்றது கலைத்தட்டுகள். இரண்டாம் சரபோஜி காலத்திலிருந்துதான் இக்கலை செழித்து வளர்ந்தது.

பிரயாகை காசி கங்கைக்கு சரபோஜி புனிதப்பயணம் சென்றபோது அங்குள்ள பித்ரி தட்டுக்களைக் கொண்டு வந்து தஞ்சையில் உள்ளூர் கம்மாளர்களை அழைத்து இப்பித்திரித் உடைய தட்டுக்களைப் போன்று கலை நுட்பம் கொண்ட வேலைப்பாடு உள்ள தட்டுகளைச் செய்யுமாறு உத்திரவிட மன்னரின் உத்தரவை ஏற்று அவர்களால் உருவாக்கப்பட்டது தான் தஞ்சைக்குப் புகழ் சேர்க்கும் கலைத்தட்டு ஆகும்.

**கட்டிட வளர்ச்சி**

கட்டிடக்கலை வளர்ச்சிக்குப் பெரும் ஆதரவு அளித்துள்ளார்

சரபோஜி. தஞ்சைப் பெரிய கோவிலில் புதிதாக விநாயகர் கோயில், கீழராஜ வீதியில் மணிகர்ணிகேசுவரர் கோயில், அரண்மனை வளாகத்தில் சந்திர மௌலீசுவரர் கோயில் மற்றும் தஞ்சையில் விட்டோபா கோயில் போன்ற கோயில்களை எழுப்பியுள்ளார். காசிப்பயணம் சென்று வந்த பின் சதா மாடியைக் கட்டியுள்ளார். காசியிலும் கயாவிலும் தாம் கண்ட கட்டிட முறைப்படி தஞ்சை அரண்மனையில் உயரமான ஏழு அடுக்குமாடி கட்டிடத்தை எழுப்பியுள்ளார். கங்கைக் கரையில் அமைந்துள்ள மாளிகைகளை முன் மாதிரியாகக் கொண்டு திருவையாற்றின் காவிரி வடகரையில் கி.பி.1825இல் கல்யாண மகால் என்ற ஒரு மாளிகையைத் தம் ஆசை மகளிர்களுக்காகத் தோற்றுவித்தார்.

1815இல் வாட்டார் லூ போர்க்களத்தில் ஐரோப்பிய நாடுகள் பிரிட்டன் தலைமையில் பிரெஞ்சு மாவீரான நெப்போலியன் போனபார்ட்டை இறுதியாகத் தோற்கடித்ததை பிரிட்டிஷ் பேரரசு விழாவாகக் கொண்டாடியது. இவ்வரலாற்று நிகழ்ச்சிக்கு நிரந்தர நினைவுச்சின்னம் எழுப்ப விரும்பி சாளுவ நாயக்கன் பட்டினத்தில் மனோரா என்ற உப்பரிகை கட்டடத்தை எழுப்பினார் ஆங்கிலேயரின் உற்ற நண்பனான சரபோஜி.

**இலக்கிய வளர்ச்சி**

நாட்டு நிர்வாகப் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்ட சரபோஜி தம் நேரம் முழுவதையும் கல்வி, இலக்கிய வளர்ச்சிகளில் அர்ப்பணித்தார். தாம் கற்ற பன்மொழிப் புலமையைப் பயன்படுத்தி மராத்தி, வடமொழி, தெலுங்கு, தமிழ் உள்ளிட்ட பன்மொழிப் புல்வர்களைத் தம் அவையில் அமர்த்தி அவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து இயல், இசை, நாடகம் ஆகிய முத்துறைகளில் பல இலக்கியங்கள் படைக்க காரணமாக விளங்கினார்.

**சரபோஜியும் சரசுவதி மகால் நூலகமும்**

தஞ்சை மாநகர்க்கு உலகப் புகழை ஈட்டித் தருகின்ற சரசுவதி மகால் நூலகம் இன்றைய உயர்நிலையை எய்துவதற்குரிய பெரிதும் காரணமாக இருந்தவர் இரண்டாம் சரபோஜி மன்னராவார். தனது பன்மொழிப் புலமையாலும் மேனாட்டுக் கல்வி அறிவாலும் இந்நூலகத்தினை நூலகவியல் முறைப்படி வளர்ச்சியடைவதற்கு வகை செய்தார். தம் காலத்தில் கிடைக்கப்பெற்ற சுவடிகளை எல்லாம் வாங்கித் தொகுத்தார்.

தம் காசிப் பயணத்தின் போது ஏராளமான சுவடிகளையும், அச்சு நூல்களையும் விலைக்கு வாங்கிச் சேகரித்தார். விலைக்குக் கிடைக்காத சுவடிகளைப் பண்டிதர்களைக் கொண்டு படியெடுக்கச் செய்தார். அரண்மனை ஜோதிட நிபுணர் மானபட்டர் தலைமையில் வடமொழி அறிஞர்கள் குழுவை வடஇந்தியாவிற்குக்குறிப்பாக வடமொழி கல்வியின் நிலைக்களனாகத் திகழ்ந்த காசி போன்ற இடங்களுக்கு அனுப்பி நூல்களைச் சேகரிக்கச் செய்தார்.

மன்னர் காசிப்பயணம் மேற்கொண்ட போது ஆயிரக்கணக்கான வடமொழிச் சுவடிகளைச் சேகரித்து சரசுவதிமகால் நூலகத்தில் சேர்த்துள்ளார். தஞ்சை சரசுவதி மகால் நூலகத்திலுள்ள பி.பி.எஸ். சாஸ்திரிகள் தொகுத்த வடமொழிச் சுவடிகளின் 23 விளக்க அட்டவணைத் தொகுதிகளில் உள்ள பெரும்பாலான சுவடிகளின் முன்னுரையில் காசி தேசத்திலிருந்து சரபோஜி மன்னர் கொண்டு வந்தார் என்ற குறிப்பு காணப்படுகிறது. .

மன்னர் London Royal Asiatic Society- ன் சென்னை கிளையின் உறுப்பினராக இருந்ததால் அயல்நாடுகளில் வெளியிடப்பட்ட அரிய நூல்களை உடனுக்குடன் வாங்கி சரசுவதிமகாலில் சேகரித்திருந்தார். நூல்களை வாங்குவதற்குத் தம்மிடம் பணமில்லாத போது தம்மிடமிருந்த விலையுயர்ந்த அணிகலன்களைக் (புதக்கங்களை) கொடுத்து நூல்களை வாங்கி தம் அறிவுப் பசியைத் தீர்த்துக் கொண்டார்.

உலகின் தொன்மையான சுவடி நூலகமான சரசுவதிமகால் நூலகம் 5-10-1918இல் வெளியிடப்பட்ட அரசாணை மூலம் இதுவரை தஞ்சை மன்னர்களின் குடும்பச்சொத்தாக இருந்த இந்நூலகம், பொது நூலகமாக அறிவிக்கப்பட்டு, இந்நூலக வளர்ச்சிக்கு அரும்பாடுபட்ட இரண்டாம் சரபோஜி பெயரைத்தாங்கி தஞ்சாவூர் மகாராஜா சரபோஜி சரசுவதி மகால் நூலகம் என்று பெயரிடப்பட்டுள்ளது. சரபோஜி சரசுவதி மகாலில் 1805இல் நவ வித்யா கலாசலா வர்ண யந்தரா என்ற அச்சுக்கூடத்தை நிறுவினார். இங்கு சமஸ்கிருதம் மராத்திய பள்ளிகளுக்குத் தேவைப்படும் புத்தகங்கள் அச்சிடப்பட்டன.

## மருத்துவப்பணிகள்

இவர் காலத்தில் தன்வந்திரி மகால் உன்னத நிலை அடைந்து பொற்காலம் கண்டது. மன்னர் தாமே மருத்துவ ஆராய்ச்சியை ஓய்வில்லாமல் மேற்கொண்டு மருத்துவத்துறையின் வளர்ச்சிக்கும் தன்வந்திரி மகாலின் உயர்வுக்கும் அயாரது பாடுபட்டார்.

## இரண்டாம் சரபோஜியின் பொழுது போக்குகள்

இரண்டாம் சரபோஜி மன்னர் பயனுள்ள வகையில் பல்வேறு பொழுது போக்குகளை மேற்கொண்டார். பல்வேறு வகையான நாணயங்களைச் சேகரிப்பதில் ஆர்வம் உள்ளவராக விளங்கினார். மன்னர் வடஇந்தியப் பயணத்தின் போது ஏராளமான அரிய வடஇந்திய நாணயங்களை வாங்கி திருவையாறு கல்யாண மகாலில் சேகரித்து வைத்திருந்தார். இந்நாணயங்களை, சென்னை அரசின் வேண்டுகோளுக்கிணங்க இலண்டனில் நடைபெற்ற நாணயக் கண்காட்சிக்கு மன்னரின் மகன் இரண்டாம் சிவாஜி அனுப்பி வைத்துள்ளார். ஓவியம் வரைதல், பழமையான பொருள்களைச் சேகரித்தல், பறவை வளர்த்தல், தோட்டக்கலை வளர்த்தல், வேட்டையாடுதல் முதலியனவை மன்னரின் முக்கிய பொழுது போக்குகளாகும்.

## மனைவிகள்

சரபோஜியின் முதல் மனைவி யமுனாம்பாபாய் சாகேப், இரண்டாவது மனைவி அகல்யாபாய் ஆவார். முதல் மனைவி மூலம் ராஜஸம்பாபாய் என்ற மகளும் இரண்டாவது மனைவி மூலமாக கலக்ஷணம்பாய், ராஜகுமாரபாயி, பாயம்மாபாய், சக்குவாக்பாய் என்ற 4 மகள்களும் இரண்டாம் சிவாஜி என்ற ஒரு மகனும் பிறந்தார்.

தம் திருமணத்திற்கு முன்பே முக்தம்பாபாய் (முத்தம்மாள்) என்ற பெண்ணை விரும்பி அவள் மூலம் மன்னருக்குப் பிறந்த இரு குழந்தைகளுமே இறந்துவிட்டனர். இரண்டாவது குழந்தை பிறக்கும் தறுவாயில் முக்தாம்பாய்யும் இறந்துவிட்டார். இறப்பதற்கு முன் அவள் கேட்டுக் கொண்டதற்கிணங்க ஒரத்த நாட்டில் அவள் பெயரில் ஓர் உயர்ந்த சத்திரத்தை நிறுவி, ஒரு கோயிலையும் கட்டி, சிங்கார வனம், குளம் போன்றவற்றை ஏற்படுத்தி ஒரு அக்கிரகாரத்தையும் நிறுவி சத்திர தர்மம் செவ்வனே நடத்துவதற்கு ஏராளமான கிராமங்களையும் வழங்கியுள்ளார்.

**தன் மகனுக்குப் பட்டம் கட்டுதல்**

சரபோஜி தன் நிர்யாண காலத்துக்கு முன் அவருடைய ஒரே மகனான இரண்டாம் சிவாஜியிடம் எல்லா அதிஷ்டானங்களும் ஒப்புவிக்கப்பட்டு பட்டம் கட்டப்பட்டது. மன்னர் காசி பயணத்தின் போதே கல்கத்தா சென்று அப்போதைய கவர்னர் ஜெனரல் ஹேஸ்டிங் பிரபுவிடம் தம் ஒரே மகன் (இரண்டாம் சிவாஜி) தமக்குப் பிறகு தஞ்சை அரசராக அரியணை ஏறவேண்டும் என்றும் அதனை அரசு அங்கீகரிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டதற்கிணங்க கவர்னர் ஜெனரலும் அப்போதே உறுதி அளித்ததுடன், பின்பு அதற்கான இசைவாணையையும் சென்னை ஆளுநர் வழியாகத் தஞ்சை ரெஸிடெண்ட் மூலம் இரண்டாம் சிவாஜிக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

**இரண்டாம் சரபோஜியின் இறுதிக்காலம்**

சரபோஜி 1832 மார்ச் 9 திங்கள்கிழமை தம் 54ஆவது வயதில் கைலாசவாசியானார். 34 ஆண்டுக்கால ஆட்சிக்குப்பின் 1832இல் மறைந்த சரபோஜி மன்னரின் இறப்புச் செய்தியைச் சென்னை அரசுக்கு ரெஸிடெண்ட் ஜே.பிளாக்பர்ன் கடிதம் மூலம் 09-03-1832 இல் தெரிவித்துள்ளார். அக்கடிதத்தில் பிளாக்பர்ன் அவர்கள் மகாராணி அகல்யாபாய் அரசருடன் உடன்கட்டையேற முடிவு செய்தார். கம்பெனி ஆட்சியின் சதிக்கெதிரான சட்டத்தையும், எதிர்ப்பையும் எவ்வளவோ எடுத்துக்கூறியும் பயனில்லை. கடைசியில் அவருடைய ஒரே மகன் இரண்டாம் சிவாஜி மற்றும் நெருங்கிய உறவினர்களுடைய அழுகையும் வேண்டுகோளும் தாம் அவருடைய முடிவை மாற்றின. சவஊர்வலத்தில் பிளாக்பர்ன் புறப்படத் தயாராகும் போது மன்னரின் ஆறு ஆசைநாயகிகளும் உடன்கட்டை ஏற பிடிவாதம் பிடித்தனர். யாராலும் தடுக்க முடியவில்லை. தான் அவர்கள் வசிக்கும் அறையின் வாயிலில் அவர்கள் பார்வையில் நின்று கொண்டு மகாராணியின் முடிவைத் தெரிவித்த உடன் அவர்கள் தீக்குளிக்கும் முடிவை கைவிட்டனர் என்று குறிப்பிட்டுள்ளார். 1829 டிசம்பரில் கல்கத்தா மாகாணத்திலும் 1830 ஜனவரியில் சென்னை, பம்பாய் உட்பட அனைத்து மாகாணங்களிலும் கவர்னர் ஜெனரல் வில்லியம் பெண்டிங் பிரபுவால் சதி சட்ட விரோதமானது என்று கருதப்பட்டு தடை செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

மறுநாள் நடந்த மன்னரின் இறுதி ஊர்வலத்தில் 90,000 பேர் பயபக்தியுடன் கலந்து கொண்டனர். மக்கள் தங்கள் தலைவனை, தந்தையை இழந்து போல தவித்தனர். அஸ்தி சேகரிப்பின் போது அழைக்கப்படாமலேயே 60,000 பேர் மயானத்தில் கூடி விட்டனர். கோட்டைக்குள் வசித்த 20,000 பேர் மன்னர் இறந்த அன்று உணவு எடுத்துக் கொள்ளவில்லை என்றும் பிளாக்பர்ன் சென்னை அரசுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

✤ ✤ ✤ ✤ ✤ ✤

## ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. சுப. அண்ணாமலை

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா


தொடர்பு முகவரி :

**ஆசிரியர், செந்தமிழ்,**
**மதுரைத் தமிழ்ச்சங்கம்,**
**மதுரை–625001.**
தொலைபேசி : 0452-6575615



பதிப்பாசிரியர் : இரா. அழகுமலை, எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர், மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–1.
தொலைபேசி : (0452) 6575615

அச்சிடுவோர் : தவம் பிரிண்டர்ஸ், 32, மேலமாசி வீதி, மதுரை – 1

RNI Regd. No.: 5508/56 July 2009


# செந்தமிழ்க் கல்லூரி
## மதுரைத் தமிழ்ச் சங்கம்

(தேசிய தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் தேசிய தரம் பெற்றது)
மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச்சங்கம் சாலை, மதுரை - 1.
தொலைபேசி 0452-2343707. நிகரி 0452-4373475

**2009 - 2010ம் [illegible]**

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

**சிறப்பு அம்சங்கள்**

மாணவர்களுக்குக் க ணிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வு பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**செம்மொழித் திட்டத்தின் கீழ் ப வகுப்புகள் உள்ளன.**

இரா. அழகுமலை
செயலாளர்
மதுரைத் தமிழ்ச் சங்கம்

முனைவர் க. சின்னப்பா
முதல்வர்
செந்தமிழ்க் கல்லூரி

இரா. குருசாமி
செயலாளர்
செந்தமிழ்க் கல்லூரி


**அனுப்புநர்,**

செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை- 625001.

**From,**

Secretary,
Madurai Tamilsangam,
Madurai - 625001.
TAMILNADU, S. INDIA

**பெறுநர் / To,**

Printed by V.Govindarajan, published by R.ALAGUMALAI on behalf of Madurai Tamil Sangam, Madurai and printed at Davam Printers, 32, West masi Street, Madurai-1, and published at 54, Tamil sangam road, Madurai. Editor R. ALAGUMALAI.